Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 100 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை

(09.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 14, 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

## கமெண்ட் கந்தர்...



விமலிட்ட இருக்கிறது உடுப்பு ஒண்டு ஆனால் பாஸ்போர்ட் ரெண்டு என்னங்கோ..?




கனடாவுக்கு செல்லப்போய் வியட்நாமில் சிக்கிய கப்பலில் விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில் முக்கியமானவர்கள் இருப்பதாக கருதும் அரச புலனாய்வுத்துறை அவர்கள் அனைவரையும் இலங்கைக்கு அழைத்துவர முயற்சிகளை மேற்கொள்கிறதாம்.

ஆனால், கப்பலில் இருந்து மீட்கப்பட்டவர்கள் எவரும் மீண்டும் இலங்கை திரும்ப விருப்பின்றி இருப்பதாக செய்திகள் சொல்கின்றன.

# ஆழ்கடலில் தத்தளித்த 303 இலங்கையர் மீட்பு!

## விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்துவர இராஜதந்திர ரீதியில் பேச்சு



(நமது நிருபர்)

கனடாவிற்கு அகதிகளாக செல்லும் நோக்கில் சட்டவிரோதமாக பயணித்த 303 இலங்கையர்களுடன் மீன்பிடி படகு மீட்கப்பட்டுள்ளதாக வியட்நாம் அறிவித்துள்ளது. இந்நிலையில், அவர்களை விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்துவர இராஜதந்திர மட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தென் சீனக் கடற்பரப்பில் ஸ்ப்ராட்லி தீவுகளுக்கு அப்பால் இலங்கையர்களுடன் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த லேடி ஆர்3 என்ற மியன்மார் கொடியைத் தாங்கிய மீன்பிடிப் படகு மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மார் கொடியுடன் கனடாவுக்குச் செல்வதாக சந்தேகிக்கப்படும் 303 இலங்கையர்கள் லேடி ஆர்3 படகு சிக்கலில்...

02 பக்கம்

## இரு மாணவர்களுக்கிடையே மோதல்; 13 வயது மாணவன் பரிதாபப் பலி

(கனகராசா சரவணன்)

**அம்பாறை தம்பிலுவிலில் சம்பவம்**

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் 8ஆம் தரத்தில் கல்வி கற்கும் 13 வயதுடைய இரு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

02 பக்கம்

## ஒரே ஆடையுடன் பாடசாலைக்கு சென்றேன்! விமல் எம்.பி.



(நா. தினுஷா)

"நான் பாடசாலை சென்ற காலத்தில் எனக்கு ஒரேயொரு பாடசாலை சீருடையே இருந்தது. அதனையே வாரம் முழுவதும் சுத்தம் செய்து அணிந்துச்சென்றேன்.

02 பக்கம்

## காணாமல்போனோர் அலுவலக தலைவருக்கு பைத்தியமா?

### உடனடியாக நீக்குமாறு மனோ எம்.பி. சபையில் ஆவேசம்



காணாமல்போனோர் பற்றி தவறான அறிவிப்பை வெளியிட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் நீக்கப்படவேண்டும். அவ்வாறானஒருவரை வைத்துக் கொண்டு நாம் அந்த அலுவலகத்தை எவ்வாறு நம்பமுடியும்? என சபையில் நேற்று கேள்வி எழுப்பிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவருக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதா தெரியவில்லையென ஆவேசத்துடன் கூறினார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்...

02 பக்கம்

## காணாமல்போனோர் பற்றி நீதியான விசாரணை அவசியம்

### சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து



இந்த நாட்டில் காணாமல்போனோர் என்று எவரும் கிடையாதென காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அதனால் மக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள். காணாமல்போனோர் பற்றி நீதியானதும் சுதந்திரமானதுமான விசாரணை அவசியமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் நேற்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் நிறைவில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு...

02 பக்கம்

## மலையக பெருந்தோட்ட மக்கள் ஒதுக்கப்பட்டவர்கள் கிடையாது!

### கண்டித்து ஜீவன் எம்.பி. சபையில் பேச்சு

(ம. சுசிகலா)

ஒதுக்கப்பட்ட மக்கள் என்று அனைவராலும் பேசப்பட்டது மலையக மக்களைப் பற்றி மட்டும் தான். மலையக மக்கள் யாரும் இழிவானவர்கள் அல்ல என்று நான் நாடாளுமன்றத்துக்கு வந்த முதல்நாள் அன்றே கூறினேன். நாம் அனைவரையும் சமமாகவே பார்க்கிறோம். நாங்களும்...

02 பக்கம்

## சம்பந்தனுக்கு 03 மாத கால விடுமுறை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு மூன்று மாத கால விடுமுறை வழங்குவதற்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதியளித்தது.

இது தொடர்பில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவினால் சபாநாயகரிடம்...

02 பக்கம்

## தோட்ட மக்களின் உரிமைக்காக ஜெனீவா பேரவைக்கு செல்வோம்!

### வடிவேல் சுரேஸ் எம்.பி. சபையில் தெரிவிப்பு

(ம.சுசிகலா)

"மலையக தோட்ட தொழிலாளர்கள் பொலிஸ் நிலையங்களில் தாக்கப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடுவோம். மலையக மக்களுக்காக ஜெனீவாவுக்கு செல்வோம்" இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் சபையில் நேற்று தெரிவித்தார்.

நாட்டு மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பில்...

03 பக்கம்

## வடக்கிலும் கிழக்கிலும் 100 நாள் செயல்முனைவின் மக்கள் பிரகடனம் வெளியீடு



02 பக்கம்

## மலையக மக்களின் அவலத்துக்கு உடனடித் தீர்வு அவசியமாகும்!

### புள்ளிவிபரங்களைக் கூறி அநுர எம்.பி. சபையில் பிரேரணை முன்வைப்பு

(நா.தினுஷா)

தேசிய மட்டத்தைவிட பெருந்தோட்ட மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். உணவின்மை அல்லது போஷாக்கின்மை பிரச்சினை பெருந்தோட்ட பிரதேசங்களில் உக்கிரமடைந்துள்ளது. சராசரியாக எடுத்துக்கொண்டால் நிறை...

02 பக்கம்

## ஆசிரியர், மாணவர்களின் உடைகளில் மாற்றமில்லை

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

(நா. தினுஷா)

எமது நாட்டின் கலாசாரத்துக்கமைய மாணவர்களின் சீருடையிலோ அல்லது ஆசிரியர்களின் உடையிலோ மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்றும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமானபோது, வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சியினரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,...

02 பக்கம்

## தாய்லாந்து தூதுவரின் இல்லத்தில் கொள்ளை

(கே. சுபானி)

**03 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மாயம்**

தாய்லாந்து தூதுவரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொள்ளுப்பிட்டி, அர்னஸ்ட் த சில்வா மாவத்தையில் அமைந்துள்ள இலங்கைக்கான தாய்லாந்து தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சூட்சுமமான முறையில் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த கையடக்க தொலைபேசி, ஒருதொகை தாய்லாந்து பணம், நினைவுச் சின்னம் மற்றும் 10ஆயிரம் ரூபா பணம்...

02 பக்கம்

## தனுஷ்கவை விசாரிக்க மூவர் அடங்கிய குழு

### இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவிப்பு



(ஏ.அகீல் சிஹாப்)

பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவை விசாரிக்க மூவர் அடங்கிய குழுவொன்றை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று நியமித்தது.

மேல் நீதிமன்ற...

02 பக்கம்

## ஒரே ஆடையுடன்...

அதனை ஒருபோதும் நாங்கள் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளவில்லை" - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச சபையில் நேற்று (08) தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கான உடை, மாணவர்களுக்கான சீருடையில் மாற்றம் கொண்டுவரப்படுகிறதா என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கேள்வி எழுப்பியபோது விமல் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஆசிரியர் என்பவர் ஏனைய அரச நிறுவன அதிகாரிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கதாபாத்திரம். ஆசிரியர் அல்லது ஆசிரியையை மாணவர்கள் தமது முன்மாதிரியாக எடுத்துக்கொள்வார்கள். அதனால் ஆசிரியர் மற்றும் ஆசிரியைகளின் வெளித்தோற்றம், ஏனைய அரச அதிகாரிகளின் வெளிதோற்றத்தை விட பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒருசில சிவில் அமைப்புகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் அவர்களை ஆதரிப்பவர்களின் கொள்கைத்திட்டங்களுக்கமைய நாட்டின் அடித்தளத்தை தகர்த்த முயற்சிக்கிறார்கள். அதனால், ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு சிவில் அமைப்புகளும் அவர்களுக்கு ஏற்றவாறான யோசனைகளை கொண்டுவருவார்கள். அதற்காக, சிவில் அமைப்புகளின் நிலைப்பாடுகள் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தின் நிலைப்பாடாகக் கொள்ள முடியாது.

பாடசாலை மாணவர்களின் சீருடையை இல்லாமல் செய்யவேண்டும் என்று நேரடியாகக் கூற முடியாது. அவ்வாறு கூறினால் நெருக்கடியை சந்திக்க வேண்டும் என்பது அந்த அமைப்புகளுக்கும் தெரியும். அதன் காரணமாகவே இதற்கு பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டுகிறார்கள்" – என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இரு மாணவர்களிடையே...

தம்பிலுவில் ஏ.பி.சி. வீதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிவபாலன் கிஷாந் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பகல் 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாகவும் மற்றைய மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

குறித்த பாடசாலையில் ஒரே வகுப்பில் இரு மாணவர்களும் கல்வி கற்றுவருகின்ற நிலையில், நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முடிவடைகின்ற நேரத்தில் உயிரிழந்த மாணவன் வகுப்பறை மேசையில் நிறப்பூச்சியால் கீறிய நிலையில், சகமாணவன் அந்த நிறப்பூச்சு கையில் பட்டதையடுத்து, இருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பைத்தியக்காரன் என தெரிவித்த மாணவனை மேசையின் கீழ்வைத்து உயிரிழந்த மாணவன் தாக்கியுள்ளான். அந்த மாணவன் அவனை திருப்பி குனியவைத்து பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தலால் தாக்கியதையடுத்து அவன் இரு மேசைகளுக்கிடையே வாயால் நுரைக்க குப்புற வீழ்ந்துள்ளதையடுத்து, வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர். சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் சக மாணவனை தாக்கிய மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இருவரும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் உயிரிழந்த மாணவனின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, அந்தப் பகுதி மக்கள் வைத்தியசாலையில் திரண்டுள்ளதுடன், இந்த பகுதியில் பெரும் சோகம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் தாக்கப்பட்ட விவகாரம்:

# அதிபர், பொலிஸார் இருவருக்கு விளக்கமறியல்

ஹொரணை, மில்லனிய பாடசாலையொன்றில் தரம் ஐந்து மாணவர்களை தாக்கியமை மற்றும் மின்சாரம் பாய்ச்சியமை குறித்து பாடசாலையின் அதிபரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று அவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

## சம்பந்தனுக்கு...

யோசனை முன்மொழியப்பட்டது. அதனை கயந்த கருணாதிலக்க எம்.பி. வழிமொழிந்தார். இதனையடுத்து சம்பந்தன் எம்.பிக்கு மூன்று மாத கால விடுமுறை வழங்கப்பட்டது.

## ஆழ்கடலில் தத்தளித்த...

இருப்பதாக தமது முகவரகத்துக்குச் செய்தி கிடைத்ததாக வியட்நாம் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தென் கடற்பரப்பில் வுங் டாவ் கரையிலிருந்து 258 கடல் மைல் தொலைவில் இருந்தபோது, கடல் சீற்றம் காரணமாக படகின் இயந்திர அறையில் சேதம் ஏற்பட்டு கடல் நீர் நுழைந்தது.

இதன் காரணமாக படகிலிருந்து ஏனைய கப்பல்களுக்கு அவசர சமிக்ஞைகள் ஒலிபரப்பப்பட்டன.

இந்நிலையில், ஜப்பானிய கொடியிடப்பட்ட ஹீலியோஸ் லீடர் கப்பல் அந்தப் பகுதியில் இருப்பதைக் கண்டறிந்ததையடுத்து, லேடி ஆ3 படகில் இருந்தவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட படகை ஜப்பானிய கப்பலால் அடைய முடிந்தது. அப்போது மீன்பிடிப் படகில் இருந்தவர்கள் பீதியில் இருந்தனர்.

அதன் பின்னர் பயணிகளை மீட்டதுடன், தேவையானவர்களுக்கு மருத்துவ உதவியும் அளிக்கப்பட்டது.

இதிலுள்ள 264 ஆண்கள், 19 பெண்கள் மற்றும் 20 குழந்தைகள் பாதுகாப்பாக உள்ளனர் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

படகில் இருந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கடற்படையை தொடர்புகொண்டு, தாங்கள் ஆபத்தில் இருப்பதாகவும், கொழும்பிலுள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு முகவரகம் சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடியதாக இலங்கை கடற்படை குறிப்பிட்டது.

இவ்வாறு படகில் இருந்தவர்கள் மீட்கப்பட்டு வியட்நாம் நோக்கிச் செல்வதாக சிங்கப்பூர் அதிகாரிகள் இலங்கைக்கு அறிவித்ததாக கடற்படைப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

## மலையக மக்களின் அவலத்துக்கு...

குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் 20 சதவீதமாகவும், ஐந்து வயதுக்கு குறைவான சிறுவர்களில் 8.2 வீதமானவர்கள் பசியால் வாடுவதாகவும், வயதுக்கு ஏற்ற உயரமற்ற நிலைமையானது மலையக பகுதிகளில் 17.4 சதவீதமாக காணப்படுவதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (08) சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் எத்தனை யோசனைகளை கொண்டுவந்தாலும் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும். தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரமும் தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. எனவே, தேர்தல் ஆணைக்குழுவின் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்புகிறோம். தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சியை தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் புரிந்துகொள்ள வேணடும்.

நிறுவனமோ அல்லது அரசாங்கமோ எதுவாக இருந்தாலும் தனிப்பட்ட நபர்களினால் நிர்வகிக் முடியாது. மக்கள் ஆணையின் பிரகாரமே உள்ளூராட்சிமன்றங்கள் முதல் ஜனாதிபதி பதவி வரையிலான நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய ஜனாதிபதி மக்களின் விருப்பில் தெரிவானவர் அல்ல.

இந்த அரசாங்கமும் மக்கள் ஆணையில் உருவாக்கப்பட்டதில்லை. தனிநபர்களின் ஆதிக்கத்திலேயே இந்த நாடு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நாளாந்த உணவு வேளையை பூர்த்திசெய்துகொள்ள முடியாத நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த 54 இலட்சம் மக்களில் அண்ணளவாக 23 இலட்சம் சிறுவர்கள் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது நாட்டைச் சேர்ந்த 23 இலட்சம் சிறுவர்களுக்கு முறையான போசாக்கு நிறைந்த உணவை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. பொருளாதார நெருக்கடி, பொருளாதார வளர்ச்சி பற்றி எவ்வளவு பேசினாலும் 23 இலட்சம் மாணவர்களுக்குத் தேவையான போசாக்கு நிறைந்த உணவை பெற்றுக்கொடுக்க முடியாதவொரு நிலைக்கு நாம் உள்ளாகியுள்ளோம். உணவின்மையானது எமது நாட்டின் மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

குறிப்பாக பார்த்தால் பெருந்தோட்டப் பகுதிகளில் இந்த நிலைமை உக்கிரமடைந்துள்ளது. சராசரியாக எடுத்துக்கொண்டால் நிறை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் 12.2 ஆக இருக்கிறது. ஆனால், நுவரெலியா உள்ளிட்ட பெருந்தோட்டப் பகுதிகளை எடுத்துக்கொண்டால் அந்த பிரதேசங்களில் பிறக்கும் குறைந்த நிறையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை 20 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஐந்து வயதுக்கு குறைவான சிறுவர்களில் 7.4 சதவீதமானவர்கள் பசியால் வாடுகிறார்கள். ஆனால், பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள சிறுவர்களில் 8.2 சதவீதமானவர்கள் பசியால் வாடுகிறார்கள். சாதாரணமாக வயதுக்கு ஏற்ற உயரமற்ற நிலைமை தேசிய ரீதியில் 8.2 சதவீமாக காணப்படுவதுடன், பெருந்தோட்டப் பகுதிகளில் 17.4 சதவீதமாக காணப்படுகிறது - என்றார்.

## காணாமல்போனோர் பற்றி...

பதிலளிக்கும் வகையிலேயே சுமந்திரன் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காணாமல்போனோர் பற்றி விசாரணை நடத்துவதற்காகவே காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. எந்த விசாரணையும் முன்னெடுக்கப்படாமல் யாரும் காணாமலாக்கப்படவில்லையென்றும் அவர்கள் வெளிநாடுகளில் வசிப்பதாகவும் அந்த அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

அந்த அலுவலகம் காணாமல்போனோர் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். இறுதிக்கட்ட யுத்தத்தில் தங்களிடம் யாரும் சரணடையவில்லையென தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக இராணுவம் தெரிவித்துள்ளது. இவ்வாறான அறிவிப்புகள் வெளியாகும்போது மக்கள் நம்பிக்கையை இழந்துவிடுவார்கள்.ஆகவே, நேர்மையான முறையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

இதற்குப் பதிலளித்த நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, இது தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லையென்றும் காணாமல்போனோர் தொடர்பில் அவ்வாறானதொரு கூற்றை மறுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

## ஆசிரியர், மாணவர்களின்...

அண்மையில் மாணவர்களை தாக்கிய சம்பவமொன்று நாட்டில் இடம்பெற்றிருந்தது. பெல்லதுடுவ, பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த குங்கமுவ கனிஷ்ட பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு 150 வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.

இதுவரை கிடைத்துள்ள தகவலுக்கமைய, ஐந்தாம் தரத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை ஒருவரின் பணப்பை காணமல்போனமை தொடர்பில் பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே பொலிஸார் குறித்த மாணவர்களை பொலிஸ் ஜீப்பில் அழைத்துச்சென்று மீண்டும் அங்கு அழைத்து வந்துள்ளார்கள். அதன்பின்னரே பெற்றோர் மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளதாகவும், பாடசாலை ஆசிரியர்கள் அல்லாமல் பொலிஸாரினால் தாக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனியான விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. அதேபோன்று, கன் கீல்வி அமைச்சு செயலாளரின் ஆலோசனையி கீழ் சுயாதீன பரிசோதனைகள் தனியாக இடம்பெற்று வருகின்றன.

மாணவர்கள் பாடாசாலைக்குள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் சுற்றறிக்கையொன்றும் அந்த பாடசாலை நிர்வாகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய இது பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யும் பிரச்சினையா என்பது குறித்தும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

விசாரணைகள் இடம்பெற்றுவருவதால் இதுதொடர்பில் மேலும் தகவல் தெரிவிக்க முடியாவொரு நிலை இருக்கிறது. இதுதொடர்பான வேலைத்திட்டங்களும் பாடசாலைகள் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர், ஆசிரியைகளின் ஆடைகளில் எவ்வித மாற்றமும் கொண்டுவரப்பட மாட்டது. அதற்கு இடமளிக்கப்போவதும் இல்லை. அந்தந்த நாடுகளுக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் மாணவர்களின் ஆடைகள் வடைவமைத்துக் கொண்டுள்ளன. எனவே, ஆசிரியர்களின் சீருடையையோ அல்லது மாணவர்களின் சீருடையையோ மாற்ற கல்வி அமைச்சு ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது என்பதை மீண்டும் வலியுறுத்தி கூறிக்கொள்கிறேன் - என்றார்.

## காணாமல்போனோர் அலுவலக...

நேற்றுக்காலை 9.30 மணிக்கு கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின் நிறைவில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பதிலளிக்கும் வகையிலேயே மனோ எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட கருத்துகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவருக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதா தெரியவில்லை. அவரை அவ்வாறு பேசவேண்டாம் என நீதி அமைச்சரான நீங்கள் வலியுறுத்த வேண்டும்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை உருவாக்கும்போது அதற்கு தற்போது ஆளுங்கட்சியில் உள்ளவர்களே எதிர்ப்பு வெளியிட்டார்கள். நாம் மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளிலும் அலுவலகங்களை ஸ்தாபித்தோம்.

அன்றைய காலகட்டத்தில் இந்தப் பணிகளைத் தொடர நீங்கள் தடையாக இருந்தீர்கள். ஆனால், நாங்கள் இந்த அலுவலகத்தை முன்னெடுத்துச் செல்ல ஆதரவை வழங்குகிறோம்.

காணாமல்போனோர் பற்றி தவறான அறிவிப்பை வெளியிட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் நீக்கப்பட வேண்டும். அவ்வாறான ஒருவரை வைத்துக்கொண்டு நாம் அந்த அலுவலகத்தை எவ்வாறு நம்ப முடியும் - என்றார்.

## மலையக பெருந்தோட்ட...

இலங்கையர்களே. அதைவிடுத்து ஒதுக்கப்பட்ட மக்களாக இன்று மலையக மக்களை மாத்திரமே பேசினர். அவர்களைத் தவிர, நாட்டில் யாரும் ஒதுக்கப்பட்டவர்கள் இல்லையா? இது முட்டாள்தனமான விடயமாகும் - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் சபையில் நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தற்போதைய நாட்டு நிலைவரம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே ஜீவன் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இன்று மலையக பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சத்து 35ஆயிரம் பேர் தோட்டத் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களைத் தவிர ஏனையோர் அனைவரும் வெளி வேலைகளில்தான் உள்ளனர். பல பேர் வைத்தியர்களாகவும், சட்டத்துறையிலும் இருக்கின்றனர். ஆனாலும் நாங்கள் ஒதுக்கப்பட்ட சமூகமாகவே பார்க்கப்படுகிறோம். இருப்பதிலேயே இதுதான் கொடுமையான விடயம்.

இன்று இந்த நாட்டில் இலவசக் கல்வி என்ற ஒன்று வந்திருக்கிறதென்றால் அது மலையக மக்களால்தான். இதனை யாராவது ஒருவர் நிராகரிக்க முடியுமா? இதைவிடுத்து வெட்கமில்லாமல் மலையக மக்களை ஒதுக்கப்பட்ட மக்களென கூறுகின்றனர். குடும்பத்தில் ஐந்து பேர் எனில், இருவர் எமது நாட்டிலும் மூவர் இந்தியாவிலும் இருப்பரென ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருந்தனர். அதைவிடக் கொடுமை எம் மக்களுக்கு எது? அனைவருக்கும் ஓப்பாரி கோச்சி தொடர்பில் தெரியுமென்று நினைக்கிறேன். தெரியாதவர்கள் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். இதற்கெல்லாம் முக்கிய காரணம் எமது பிரிவினையே. பல பேர் மலையக மக்களென்றால் நுவரெலியாவில் மட்டுமே வாழ்வதாக நினைக்கின்றனர். ஒரு விடயத்தைத் தெளிவாக தெரிவிக்க விரும்புகின்றேன். மலையக மக்களைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு என நாடளாவிய ரீதியில் வாழ்கின்றனர்.

இன்று கொழும்பிலுள்ள பல தொழிலதிபர்களைக் கேட்டால் கொழும்புத் தமிழ் என்பார்கள். ஆனால், அவர்களின் பூர்வீகத்தை எடுத்துப்பார்த்தால் அவர்கள் மலையகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். ஏனெனில், அவரது பாட்டன் கோட் சூட் போட்டிருப்பார். அவரை பெரிய கங்காணி என்பர். இவர் கோட் சூட் போட்டிருப்பார். இவர் தொழிலதிபர் என்பார். இதுதான் எமது மக்களின் பிரிவினை.

வன்னியில் எத்தனையோ இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆனால், இன்று அந்த மக்களுக்கு எவ்வித உரிமைகளும் இல்லை. நம்பொடையில் புளூபீல்ட் தோட்டம் குறித்து பேசியே ஆகவேண்டும். மூன்று வருடங்களுக்கு முன்னர் மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமான் 2019 மே முதலாம் திகதி ஒரு வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். அதற்கான காரணம் அது ஒரு தனியாருக்கு சொந்தமான தோட்டம். அந்த மக்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கிடைக்கவில்லை. ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. நான் இன்று பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். நாங்கள் நடத்திய இந்த போராட்டத்தை இன்று நாங்கள் வெற்றிகரமா நிறைவுசெய்கிறோம். ஓய்வூதியப் பணம் வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையில் நிவாரணப் பணம் வழங்குகின்றனர். அதேபோல் காணியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வெற்றியை மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு நான் சமர்ப்பிக்கிறேன் - என்றார்.

## தனுஷ்கவை

ஓய்வுபெற்ற நீதிபதி சிசிர ரத்நாயக்க சட்டத்தரணிகளான நிரோஷன பெரேரா மற்றும் அசேல ரேகாவா ஆகியோர் அடங்கிய 3 பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் இலங்கை தேசிய அணி தங்கியிருந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பிலும் இந்தக் குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. குழுவின் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தனுஷ்க குணதிலக்க குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் அவர் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய யுவதி அளித்த குற்றச்சாட்டின் பேரில் தனுஷ்க குணதிலக்க கடந்த 6ஆம் திகதி தான் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்து...

ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திருடிச் செல்லப்பட்ட பொருட்கள் மற்றும் பணம் உள்ளிட்டவை மூன்று இலட்சம் ரூபா பெறுதியானவை என கொள்ளுப்பிட்டி பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து தகவலறிந்து விரைந்த கொள்ளுப்பிட்டி குற்றவியல் விசாரணை பொலிஸ் குழுவினர், இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போச் ஹான்போலின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

தூதுவரின் இல்லத்தில் திருடிச் சென்றவர் குறித்து இதுவரை எவ்வித தகவலும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படும் நிலையில் மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி குற்றவியல் விசாரணை பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## வடக்கிலும் கிழக்கிலும்...

வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு கோரிய நூறு நாள் செயல்முனைவின் மக்கள் பிரகடனம் வடக்கிலும் கிழக்கிலும் நேற்று (08) வெளியிடப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் அவ்விரு மாவட்டங்களிலும் உள்ள எட்டு மாவட்டங்களில் கடந்த 99 நாட்களாக சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் பின்னர் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரடியில் உள்ள சங்கிலியன் சிலைக்கு அருகிலும் மன்னாரில் பொது விளையாட்டு மைதானத்திலும் அம்பாறையில் காரைதீவு கடற்கரைப் பூங்காவிலும் திருகோணமலை முற்றவெளியிலும் மட்டக்களப்பில் தன்னாமுனையிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டுவரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறோம்:

1.வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு, கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்

2. ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசினால் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்

3. ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்

4. முதலமைச்சர் மக்கள் பிரதிநிதிகள் சபையின் தலைமை உறுப்பினராக திகழ்வார்

5. ஆளுநர் என்பவர் மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையைக் கட்டுப்படுத்தாதவராகவும் மத்திய அரசின் கௌரவ பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும்

6. வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

7. மாகாண மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்திசார் சர்வதேச ஒப்பந்தங்களை மாகாண ஆட்சி மேற்கொள்ளும் அதிகாரத்தைக்கொண்டிருக்க வேண்டும். இதில் சர்வதேச வணிகம், தொழிற்துறை அபிவிருத்தி, நகரமயமாக்கல் அடங்கலான கட்டுமான அபிவிருத்தி ஆகியன அடங்கல் வேண்டும்

8. காணி மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஏனைய அனைத்து விவகாரங்கள் சாரந்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாகாண ஆட்சிக்கு வழங்கப்பட வேண்டும்

9. மாகாண அலகிற்கான பொலிஸ், உளவுத்துறை சேவைகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

10. நீதித்துறை, அரச நிர்வாகம், கல்வி, பொதுச் சுகாதாரம், பொதுப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், எரிபொருள் அடங்கலான ஏனைய அனைத்து துறைகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு மாகாண ஆட்சிக்குள்ள அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11. தற்போது வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

12. தற்போதைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மிதக்கும் கடற்படைத்தளங்களை தேவையான கடற்பிரதேசங்களில் மத்திய அரசு அமைக்க வேண்டும். இதன்மூலம் மக்கள் காணிகள் இராணுவத்தின் வசமிருந்து விடுவிக்கப்படுவதுடன், இயல்புவாழ்வை மீளப்பெற முடியும்.

13. இலங்கையின் மத்திய அரசானது, வடக்கு கிழக்கு மாகாண அலகு பொருளாதாரப் பலம் அடைவதற்காக குறிப்பிட்ட காலம்வரையில் தேவையான நிதிசார் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

14.தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் சார்ந்து பொறுப்புக்கூறும் கடப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது. எனவே, சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஐ.நாவின் வழிகாட்டலில் சர்வதேச நாடுகளுடன் இணைந்து நீதிப்பொறிமுறைகளை உருவாக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.

15. வடக்கு, கிழக்கு மாகாண அலகானது மாகாணத்துக்குள் வாழும் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன-மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய நிலைபேறான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

16. மத்திய அரசானது, இலங்கை நாட்டின் மக்கள் அனைவரினதும் ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்க நாம் அயலிலுள்ள நட்புநாடான இந்தியாவையும், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஐ.நா.சபையையும் கோருகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# நாட்டை அழித்தவர்களே பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என கூக்குரலிடும் நிலை

## சபையில் சாடினார் சாணக்கியன் எம்.பி.

நீண்டகாலமாக நீடித்துவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது. நாட்டை அழித்தவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமென கூக்குரல் இடுகின்றனர் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைப் பார்க்கின்றபோது பொருளாதார பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக கடந்த பல வருடகாலமாக இடம்பெற்றுள்ள பிரச்சினைகளைக் கூறலாம். இப்பொருளாதார பிரச்சினைகளுக்கு 1948இலிருந்து ஆட்சி புரிந்த அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இந்திய வம்சாவழியினர் ஆற்றிய பாரிய பணிகளாக துறைமுகம் அமைத்தல், தேயிலைக் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவியமை போன்றவற்றைக் குறிப்பிட்டார்.

டி.எஸ்.சேனநாயக்க இந்திய வம்சா வழியினரின் குடியுரிமையைப் பறித்தார். இலங்கைப் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குவது ஆடைக் கைத்தொழிலாக இருக்கின்றபோதிலும் தேயிலையின் ஊடாகவே அதிக ஏற்றுமதியை நாம் பெறுகின்றோம். இவ்வாறு 1948இலிருந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவிய தேயிலைத் தொழிலாளர்களுக்கு நாம் என்ன உதவிகளை செய்துள்ளோம் என தனது உரையில் கேள்விகளை எழுப்பினார். மேலும் இந்தியத் தமிழர்களை வெளியேற்றுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சியே தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பின் ஒரு பகுதியாகவே அம்பாறை காணப்பட்டது. ஆனால், தற்போது ஒரு மாவட்டமாக உருவாகியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் காணியில்லாத அநேகர் இருந்தனர். எந்த இனத்தவருக்கும் காணி வழங்கப்படாதபோது வேறு இடங்களிலிருந்து மக்களை கொண்டுவந்து அம்பாறை மாவட்டத்தில் குடியமர்த்தினர். நான் 500 இளைஞர்களை மாத்தறைக்கு அழைத்துச்சென்று காணி வழங்க முனைந்தால் மாத்தறை இளைஞர்கள் விரும்புவார்களா, இதற்கு உடன்படுவார்களா? இன்று



பொருளாதார பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிங்கள மக்களுக்கு உண்மையைக் கூறுங்கள், "நாட்டை அழித்தது அரசியல்வாதிகள்தான்" என. தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்காது தடையாக இருப்பது யார்? என நீங்களே கூறுங்கள் .

இங்கு வரிச்சலுகை பற்றி பேசப்பட்டது. சுற்றுலாப்பயணிகள் வருகின்ற காலம் தடையை ஏற்படுத்த வேண்டாமெனக் கூறினர். சுற்றுலாப்பயணிகளால் மாத்திரம் தற்போதைய நெருக்கடி நிலையை சீர்செய்ய முடியாது. 1948 தொடக்கம் தற்போதுவரை நீடித்து வருகின்ற தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்க்காதுவிட்டால் இந்த நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஐரோப்பியர்கள் 400 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டை ஆண்டனர். சுதந்திரத்தின் பின்னர் பண்டாரநாயக்கா சிங்கள தனிச்சட்டத்தைக் கொண்டுவந்தார். சிவில் நிர்வாக முறைமை கொண்டுவரப்பட்டமையால் தமிழர்கள் வேலைவாய்ப்பை இழந்தனர்.

மேலும் அவர், யாழ் மாவட்டத்திலும், மொனராகலை மாவட்டத்திலும் ஒரே புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்களில் மொனராகலை மாவட்ட மாணவர் பல்கலைக் கழகத்திற்கு செல்ல தகுதியுடையவராகின்றார். ஆனால், யாழ். மாவட்ட மாணவர், அனுமதி நிராகரிக்கப்படுகின்றார். இங்கு அநீதியே இழைக்கப்படுகின்றது. அம்பாறை, கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டுமென்பதற்காக யாழில் பல்கலைக்கழகம் தெரிவான மாணவரின் வாய்ப்பைப் பறிப்பது நியாயமானதா?

இலங்கையை அழித்தவர்கள்தான் தற்போது பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டுமென கூக்குரலிடுகின்றனர். நீண்ட காலமாக தீர்க்கப்படாத தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதுவிட்டால் இந் நாட்டின் பிரச்சினையை தீர்க்க முடியாது.

முன்னைய அரசாங்கம் சர்வதேசத்திற்கு பல வாக்குறுதிகளை அளித்தது. அதிலொன்று "யுத்தத்தினை முடித்துக்கொள்ளுங்கள், தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குகின்றோம்" என்பதாகும். 2012 வரை இந்த வாக்குறுதி தொடர்பில் ஆர்வம் காட்டப்படவில்லை. ஆகவேதான் இப் பிரச்சினை மனித உரிமைகள் ஆணையகத்திற்கு சென்றது.

சிங்கள உறுப்பினர்களிடம் தமிழ்க் கைதிகளை விடுவிக்கும்படி பரிந்துரை செய்யுமாறு கேட்கின்றேன். அவ்வாறு செய்வீர்களா? கைதிகளாக்கப்பட்டவர்களின் உறவுகள் கூறுகின்றனர் இந்த இடத்தில் எனது புதல்வரை, கணவரை கையளித்தேன் என. அந்த தாய்க்கும், மனைவிக்கும் உரிமை இருக்கின்றது தனது புதல்வர், கணவனுக்கு நடந்தவற்றை கேட்பதற்கு. தேர்தலை காலம் தாழ்த்தக்கூடாது. இந்த நாட்டில் அதிகாரப் பரவலாக்கத்திற்கு ஒரு முறையை கொண்டு வாருங்கள். நாட்டை இரண்டாகப் பிரிக்கக் கூறவில்லை. ஒரே நாட்டிற்குள் அதிகாரப் பரவலாக்கத்தினை கொண்டுவரும்படியே கூறுகின்றோம்.

கமத்தொழில் அமைச்சின் ஊடாக சேதனப் பசளையை பயன்படுத்த ஒரு ஹெக்டேயருக்கு ரூ.20,000 வழங்கப்படுகின்றது. 17 கம்பனிகள் சேதனப் பசளையை பதிவுசெய்யப்பட்டிருக் கின்றன. மட்டக்களப்பில் மாத்திரம் 73,000 ஹெக்டேயர் பரப்பளவு காணிகள் உள்ளன. ரூ. 20,000 வழங்குவதென்றால் ரூ.160 மில்லியன் தேவைப்படுகிறது. சேதனப் பசளையில் ஈர சாணம் மாத்திரமே உள்ளது. இக்கம்பனிகளுக்கு வழங்கும் பணத்தினை பிரதேச சபையின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்குங்கள். மாவட்ட அபிவிருத்தித் தலைவர்களிடம் சேதனப் பசளையைக் காண்பிக்குமாறு கூறினால் அவர்கள் அவற்றை நிராகரிக்கின்றனர். மாவட்ட அபிவிருத்தித் தலைவர்களுக்கும் இந்தக் கம்பனிகளுக்கும் ஏதோவொரு பிணைப்பு உள்ளது.

அவர்களுக்கும் இப்பணத்திலிருந்து செல்கின்றதுபோலும். பணவீக்கம் அதிகரித்துள்ளது. இலங்கைக்கு 15 முதலீட்டாளர்கள் வருகை தந்துள்ளனர். அவர்களைக்கொண்டு எமது நாட்டில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் எனவும் தனது நாடாளுமன்ற உரையின்போது கருத்து வெளியிட்டார்.

# பரீட்சைகள் பிற்போடப்பட மாட்டாது: கல்வியமைச்சர் சபையில் அறிவிப்பு!


க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பன பிற்போடப்பட மாட்டாது - என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பல்வேறு காரணங்களால் உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு இணங்க பரீட்சை திகதியை நிர்ணயித்ததாக குறிப்பிட்டார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளு மன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின்போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை டிசம்பர் 18ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை 2023 ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரையிலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

# பூனாகலையில் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானை அட்டகாசம்







(பதுளை பிராந்திய செய்தியாளர்)

பூனாகலை தோட்டம் ஆர்னோல்ர்ட் பிரிவில் குடியிருப்புப் பிரதேசத்திற்குள் 2 காட்டு யானைகள் நேற்று (08) அதிகாலை வேளையில் உட்புகுந்து பல்வேறான சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதிகாலை மூன்று மணியளவில் உட்புகுந்த இக்காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் பிரவேசித்து மாந்தோப்பு, தென்னந்தோப்பு போன்றவற்றை நாசம் செய்துள்ளதுடன், பல்வேறான சேதங்களையும் உண்டுபண்ணியுள்ளதுடன், வேலிகள் சிலவற்றையும் நாசம் செய்துள்ளன.

இது தவிர, பயன்தரும் மரங்கள் உள்ளிட்ட மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் மரம், செடி, கொடிகள் பலவற்றையும் இக்காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன. இச்சேதங்களை உண்டு பண்ணிய காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் தங்கியிருந்த பொதுமக்கள் சிலரையும் தாக்க முற்பட்டதாகவும் மயிரிழையில் தாம் உயிர் தப்பியதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் கடந்த 2014ஆம் ஆண்டிற்கு பின்பு பெருந்தோட்டப் பகுதி காணிகளை தோட்ட நிர்வாகங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமல் பெரும்பாலான தோட்டங்கள் காடுகளாக மாறியுள்ளன. வெல்லவாய பிரதேச காடுகளிலுள்ள காட்டுயானைகள் கைவிடப்பட்ட பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வருகை தருகின்றன. வருகை தரும் காட்டு யானைகள் இரவுபொழுதுகளில் மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்து, விவசாயச் செய்கைகள், மரம், செடி, கொடிகள் போன்றவற்றை நாசம் செய்து வருவதுடன், தமது குடியிருப்புகளையும் சேதமாக்கி வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கை மேற்கொள் ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கலாசாரத்தை மாற்றுமாறு கோரிக்கை விடுக்கவில்லை

## ஆசிரியர்களின் ஆடை விவகாரம் தொடர்பில் ஜோசப் ஸ்டாலின் கருத்து

(நா. தினுஷா)

ஆசிரியர்களின் ஆடை விடயத்தில் அனைவரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறார்கள். இந்த விடயத்தில் எந்த சூழ்ச்சியும் இல்லை. ஆசிரியர்களின் நிலைப்பாடுகளை அறிந்ததன் பின் கருத்துகளை வெளியிடுவது ஏற்புடையதாக இருக்கும். கலாசாரத்தை முழுமையாக மாற்ற வேண்டும் என்றும் நாங்கள் கோரவில்லை. விரும்பியவர்கள் சுலபமான ஆடையில் வருவதற்கு அனுமதி வழங்குமாறே கோருகிறோம் - என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

இரண்டு இலட்சத்து 47 ஆசிரியர்களில் 70 சதவீத்துக்கும் அதிகமானவர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தவும் இல்லை. அவர்களிடம் விசாரிக்கவும் இல்லை. ஆனால், 90 சதவீதமானவர்கள் இந்த விடயத்துக்கு விருப்பம் இல்லை. இது தவறான யோசனை, இது மேற்குலக சூழ்ச்சி, இதனால் கல்வித்துறையே அழிந்துவிடும் என்று கல்வி அமைச்சரே கூறுகிறார்.

ஆனால், இதில் எந்த சூழ்ச்சியும் இல்லை. அரச நிர்வாக சுற்றறிக்கையை நடைமுறைப் படுத்துமாறே நாங்கள் கோருகிறோம். அந்த சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படுகிறதா இல்லையா என்பது குறித்து தேடிப்பார்த்து கருத்து வெளியிடுவதற்கு மாறாக இவ்வாறான பின்னடைவான நிலைப்பாடுகளை வெளியிடுவது கல்வித்துறையின் எதிர்கால பயணம் முன்னேற்றம் அடைவதற்குப் பதிலாக பின்னடைவைச் சந்திக்கும் என்றே நாங்கள் எண்ணுகிறோம்.

அதேபோன்று ஒருசில சமயத்தலைவர்களும் இந்த விடயம் குறித்து தொடர்ந்து பேசி வருகிறார்கள். இதுதொடர்பில் பேசுவதற்கு முன்னர் குறைந்தது ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்களா என்பது தெரியவில்லை. அல்லது விசாரித்துப் பார்த்தார்களா என்பதும் புரியவில்லை.

சேலை குறித்து பேசுகிறார்கள். இந்த சேலைகள் இந்தியாவிலிருந்து வருகின்றன. அதற்காக ஆசிரியர்களின் சேலைக்கு மாற்றுத்திட்டம் கொண்டுவரவேண்டும் என்று கோரவில்லை. விரும்பியவர்கள் சுலபமான ஆடையில் வருவதற்கு அனுமதி வழங்குமாறே நாங்கள் கோருகிறோம்.

# கிளிநொச்சி புதுமுறிப்பில் வெட்டுக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

(மு.தமிழ்ச்செல்வன்)



கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் நீர்ப்பாசன வாய்க்காலில் வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வீதியால் சென்றவர்கள் சடலம் வாய்க்காலில் இருப்பதனை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் ராஜன் குடியிருப்பைச் சேர்ந்த ப. சத்தியராஜ் (வயது 36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பின்னர் புதுமுறிப்பு குளத்தின்கீழ் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் சடலத்தை வீசியிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதிபதி பார்வையிட்ட பின்னர் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படும்.

இது தொடர்பாக மேலதிக விசாரணை கிளிநொச்சி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தோட்ட மக்களின்...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா பஸ் விபத்தில் உயிரிழந்த யாழ். பல்லைக்கழகத்தின் சித்த மருத்துவ பீட மாணவியும், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியின் பழைய மாணவியுமான சயகரி அகால மரணமானதை முன்னிட்டு அவரது குடும்பத்துக்கு மலையக மக்கள் பிரதிநிதி என்ற வகையில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கனவரெல்ல கணேசமூர்த்திக்கு வழங்கிய நஷ்ட ஈட்டுக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக டயகம கிழக்கு மூன்றாம் பிரிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராமகிருஷ்ணன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். கனவரெல்ல கணேசமூர்த்திக்கு வழங்கிய நஷ்டஈட்டைப் போலவே அதனடிப்படையிலே இவருக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

மலையக மக்கள் சார்பாக பேசும்போது விசேடமாக பெருந்தோட்டம். பெருந்தோட்டங்களில் ஏற்படும் தொழில் பிணக்குகளை இன்று பொலிஸ் நிலையங்களில் தீர்த்துவைக்கப்படக்கூடிய ஒரு கேவலமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்று தொழில் அமைச்சு, தொழில் ஆணையாளர், உதவித் தொழில் ஆணையாளர் மற்றும் தொழிற்சங்கங்கள் எல்லாம் இருக்கின்ற நிலையிலும் கூட, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பிணக்குகளை பொலிஸ் நிலையத்தில் தீர்த்து வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஹாலிஎல றொசெட் தோட்டத்தில் அவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹாலிஎல றொசெட் தோட்டத்தில் கனகரெத்தினம் என்ற தொழிலாளி தோட்ட உதவி முகாமையாளரால் பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டு, பொலிஸ் பொறுப்பதிகாரியும் பொல்லால் தாக்கி பதுளை வைத்தியசாலையிலே குறித்த தொழிலாளி சேர்க்கப்பட்டுள்ளார். இது அராஜகம். பெருந்தோட்டக் கம்பனிகளின் அராஜகம். பெருந்தோட்டப் பொலிஸ் நிலையங்களில் நடக்கின்ற அராஜகம். தொழிற்சங்கப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க மலையக பொலிஸ் நிலையங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? பொலிஸ் நிலையம் என்றால் களவு, கொலை செய்பவர்களை கைதுசெய்ய வேண்டும். இங்கு கசிப்பு உற்பத்தி செய்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களைக் கைதுசெய்யாது அப்பாவி தோட்டத் தொழிலாளியைத் தாக்குவதற்கு காரணம் என்ன? யார் அவருக்கு அதிகாரம் கொடுத்தது. மலையக தோட்டத் தொழிலாளர்களை பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்குவதற்கு யாருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. எதற்காக நாடாளுமன்றம், எதற்காக நாம் இருக்கின்றோம். உடனடியாக ஹாலிஎல பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாடாளுமன்றம் பொறுப்புக் கூறவேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சரவைக்கு தெரிவிக்க வேண்டும். இன்று எமது பெருந்தோட்ட மக்களை மிருகங்கள்போல் நடத்துகின்றனர். ஆகவே, பொலிஸ் நிலையத்திற்கும் பெருந்தோட்டக் கம்பனிக்கும் இருக்கின்ற உறவு, அந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட வேண்டும்.

200 வருடத்துக்கு மேலாக வாழ்கின்ற மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அறிவிக்க வேண்டும். தமிழ்மொழி பிரகடனப்படுத்தப்பட வேண்டும். மலையக பொலிஸ் நிலையங்களில் தமிழ்பேசும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளை நியமியுங்கள். இன்று தமிழ்மொழி மலையகத்தில் கேள்விக்குறியாக இருக்கின்றது. ஒரு காலத்திலே கூறினார்கள் தமிழ் மொழி மூலமான கல்வியால்தான் மலையகம் பெறுபேறுகளில் பின்னடைவை சந்திக்கிறது என்று. இன்று பெருமையாக சொல்கிறேன். மலையகத்தில் தமிழ்ப் பிள்ளைகளின் பெறுபேறுகள்தான் மலையகத்தை தலைநிமிரச் செய்திருக்கிறது. ஆகவே, மலையகத்தில் ஆளணிப் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை இருந்தாலும் தமிழ் கல்வி இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் பொலிஸ் நிலையங்களில் தாக்கப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையிடுவோம். மலையக மக்களுக்காக ஜெனீவாவுக்கு செல்வோம். மாகாண சபைகள் இல்லாதமையால் தமிழ்ப் பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்றன. பெருந்தோட்ட மக்களைப் புறக்கணித்துவிட்டு வசதி படைத்தவர்களுக்கு சமுர்த்தி வழங்குகின்றனர். இதற்கான காரணம் என்ன? என்றார்.

# அரசின் அடக்குமுறை தீவிரமடைந்துவிட்டது

## பேராயர் மல்கம் ரஞ்சித் சாடல்



தற்போதுள்ள அரசாங்கத்தின் கொடூரமான அடக்குமுறைகள் தாங்க முடியாத அளவிற்கு வளர்ந்துள்ளதாக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக நாட்டில் சுதந்திரம் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவை செயற்படுமாறு கோரப்படுவதாக பேராயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற மற்றும் ஏற்கனவே இடம்பெற்றுவரும் ஊழல், மோசடிகளுக்கு எதிராக குரல் கொடுக்கும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தும், எதிர்ப்புப் பேரணிகளை நடத்தும், சமூக மற்றும் மனித உரிமைகளில் செயற்படும் தலைவர்கள் மற்றும் மக்களுக்கு எதிராக அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பேராயர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வசந்த முதலிகே மற்றும் வணக்கத்திற்குரிய கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோர் 75 நாட்களாக குற்றஞ்சாட்டப்படாமல் அநியாயமாக தடுத்துவைக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென கர்தினால் தேரர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும் வேலைத்திட்டம் மக்களை தவறாக வழிநடத்தும் நாடகமே எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் சில பாகங்களை மக்களுக்கு வழங்காமல் மறைத்து வைக்கும் முயற்சிகள் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மையை மறைக்கும் இரகசிய முயற்சியின் மற்றுமொரு அம்சமாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 09ஆம் திகதி, புதன்கிழமை

# புனர்வாழ்வு என்ற பெயரில் உரிமை மீறல் தொடர்வதா?

வெலிகந்தை, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) ஏற்பட்ட மோதலையடுத்து 540 கைதிகள் தப்பி ஓடினர். 5 கைதிகள் மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் உட்பட 10 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 505 பேரை கைதுசெய்துள்ளதுடன், 30 பேரைக் காணவில்லை எனவும் இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து அவர்களை தேடி வருவதாகவும் சொல்லப்பட்டது.

பொலன்னறுவை, மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்பகுதியில் அமைந்துள்ள வெலிகந்தை, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள 540 பேரை தடுத்துவைத்து இராணுவத்தினர் புனர்வாழ்வளித்து வருகின்றனர்.

கடந்த ஞாயிறு இரவு 10 மணியளவில் காலி பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை மாதம்பை பகுதியைச் சேர்ந்த ஒருவர் தாக்கியதையடுத்து மாத்தறையான் தாக்கப்படுவதாக மாத்தறையைச் சேர்ந்த ஒருவர் குரல் கொடுத்ததையடுத்து மாத்தறையைச் சேர்ந்த குழுவினருக்கும் மாதம்பை பகுதியைச் சேர்ந்த குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக செய்திகள் சொல்கின்றன.

அங்குள்ள கைதிகள் படுக்கை விரிப்புகள், மெத்தைகளை தீக்கிரையாக்கியதையடுத்து அங்கு நிலைமையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரச் சென்ற பொலிஸார் மீது கைதிகள் தாக்குதலை நடத்தியதில் பொலிஸ் பொறுப்பதிகாரி, இரு பொலிஸார், இராணுவ அதிகாரி, கைதிகள் உட்பட 10 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்

தப்பியோடிய பின்னர் நடத்தப்பட்ட தேடுதலில் கைதுசெய்யப்பட்ட 201 பேர் பொலன்னறுவை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 234 பேர் சேனாபுர புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

3 மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து வேலியை உடைத்து சுமார் 600 மேற்பட்டோர் தப்பிச் சென்றனர். அப்போதும் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார். அப்போது விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் அறிக்கை நீதியமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இப்போதைய சம்பவம் குறித்து விசாரிக்கவும் சிரேஷ்ட அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். இந்த குழுவினூடாக தயாரிக்கப்படும் அறிக்கை, நீதி அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இந்த மோதல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நீதி அமைச்சரிடம் அறிக்கையொன்றை கோரியுள்ளார்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசாங்கமானது போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பில் இராணுவமயப்படுத்தப்பட்ட அணுகுமுறையை கையாள்வதால் பல துர்ப்பாக்கிய சம்பவங்கள் நடந்துள்ளன.

போதைப் பொருட்கள் மீதான யுத்தத்தில் இராணுவமானது விசேடமான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. குறித்த வகிபங்கானது போதைப்பொருள் கடத்தப்படுவதை தடுப்பதில் மாத்திரமல்லாது, போதைப்பொருள் அடிமையானவர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் தடுத்துவைத்தல் போன்றவற்றையும் உள்ளடக்குகிறது.

இலங்கையில் அரசால் நிர்வகிக்கப்படும் மற்றும் தனியார் போதைப்பொருள் புனர்வாழ்வு மையங்கள் காணப்படுகின்றன. கந்தகாடு மற்றும் சேனாபுர என்பன அனைவராலும் அறியப்பட்ட மிக பெரிய மையங்களாகும். 2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வுளிப்பதற்காக இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட குறித்த புனர்வாழ்வு மையங்கள் இன்று வரை இராணுவத்தினரின் கைவசமே உள்ளன.

2007ஆம் ஆண்டின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் (சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்) சட்டமானது, போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் என சந்தேகிக்கும் நபர்களை மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்புவதற்கும் குறித்த நபரை நீதவான் நீதிமன்றின் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு அதிகாரமளிக்கிறது.

நீதவான் நீதிமன்றமானது, போதைப்பொருள் சார்புநிலை தொடர்பான மருத்துவ மதிப்பீட்டறிக்கையின் அடிப்படையிலோ அல்லது விஷங்கள், ஔடதங்கள் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச்சட்டத்தின் கீழோ குறித்த நபரை தண்டிக்கும் பொருட்டு வலுக்கட்டாய புனர்வாழ்விற்காக அனுப்பிவைக்க முடியும். மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 10ஆனது எந்தவிதமான சாட்சிகளும் இல்லாமல் ஆட்களை கைதுசெய்து தன்னிச்சையாக தடுப்புக்காவலில் வைப்பதற்கு இடங்கொடுப்பதுடன், வலுக்கட்டாயமான போதைப்பொருள் புனர்வாழ்விற்கு அவர்கள் தீர்ப்பளிக்கப்படுவதற்கும் வழிவகுக்கின்றது.

இவ்வாறு போதைப்பொருள் பாவனைக்கான சிகிச்சையானது தன்னிச்சையான தடுப்புக்காவலில் வந்து முடிகிறது. இராணுவத்தால் நடத்தப்படும் நிலையங்களில், ‘சிகிச்சை’ என்ற பெயரிலோ அல்லது ‘தண்டனை’ என்ற பெயரிலோ பரவலாக வன்முறை இழைக்கப்படுகிறது என்பதே மனித உரிமை ஆர்வலர்களின் கருத்தாக இருக்கிறது. இந்த மையங்களில் சிகிச்சை பெறுபவர்கள் தங்கியிருக்கும் காலம் முழுவதும் வன்முறை, முறையற்ற நடத்துகை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகின்றனர். வன்முறைகள் மற்றும் தவறான நடத்துகைகள் தண்டனைக்காக அல்லது காரணமேயில்லாமல் அங்கு தடுத்து வைக்கப்படும் நபர்களின் மேல் இழைக்கப்படுகின்றன.

2015ஆம் ஆண்டின் ஆய்வுகளின்படி தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் சிகிச்சையின் திறனை பொறுத்தவரையில் 64 வீதமான சிகிச்சை பெற்றவர்கள் விடுதலையான பின்பு போதைப்பொருள் பாவனையை மீண்டும் ஆரம்பித்தனர்.

இது அதிகளவானவர்கள் போதைப்பொருள் பாவனையை மீண்டும் ஆரம்பித்ததை சுட்டிக்காட்டுகிறது. 2018இல் வெளியிடப்பட்ட அதேபோன்றதொரு அறிக்கையில், நேர்காணல் செய்யப்பட்ட 170 நபர்களில் அரசால் செய்யப்பட்ட வலுக்கட்டாயமான போதைப்பொருள் தடுப்பு சிகிச்சையின் பின்பு 123 நபர்கள் போதைப்பொருள் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

இந்த அறிக்கைகள் வலுக்கட்டாயமான புனர்வாழ்வளிப்பதானது செயற்திறனற்றதாகியிருப்பதைக் காட்டுகிறது. வலுக்கட்டாயமான போதைப்பொருள் தடுப்பு சிகிச்சை முறையானது செயற்திறனற்றது என்பதை இத் தரவுகள் உறுதிசெய்கின்றன. எனவே, புனர்வாழ்வு என்ற பெயரில் இவ்வாறு நிலையங்களை தொடர்ந்து நடத்துவதா, அங்கு மனித உரிமை மீறல்களுக்கு இடமளிப்பதா என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும்.

# மக்களின் பொருளாதார இடர்களை மறைக்கும் வழமைநிலை போன்ற ஏமாற்று தோற்றப்பாடு!



கலாநிதி ஜெகான் பெரேரா

எதிரணி அரசியல் கட்சிகள், பெருமளவு தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களினால் கடந்த வாரம் கொழும்பில் ஏற்பாடுசெய்த ஆர்ப்பாட்டம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது. ஆர்ப்பாட்டக் குழுக்களை விடவும் கட்டுறுதியான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பாரிய பொலிஸ் படையணி ஆர்ப்பாட்டக்காரர்களின் பாதையை மறித்துநின்றது.

பொது வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்படமாட்டாது என்று பொலிஸார் ஏற்கனவே அறிவித்திருந்தனர். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதைத் தொடர்ந்து மிகவும் குறுகிய முறையில் சட்டத்தை வியாக்கியானம் செய்யத்தொடங்கிய அரசாங்கம், வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் ஆர்ப்பாட்டங்களுக்கான இடங்களின் வீச்செல்லையை மட்டுப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறது.



மக்கள் ஆர்ப்பாட்டப் பகுதிகளின் நிலைமை 6 மாதங்களுக்கு முன்பிருந்ததை விடவும் மிகவும் குறிப்பிடத்தக்களவுக்கு மாறியிருக்கிறது. அந்த நேரத்தில் போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தை எட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக வைத்தது. வீதிகள் மாத்திரமல்ல, முழு நாடுமே போராட்டத்தில் இணைந்ததுபோன்று இருந்தது. தவறான ஆட்சிமுறையினாலும் ஊழலினாலும் நாட்டை வங்குரோத்து அடையச்செய்தவர்களை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் என்பது அப்போது போராட்ட இயக்கத்தின் முக்கிய முழக்கமாக விளங்கியது. அரசாங்கத்தின் சில தலைவர்கள் கடற்படைத் தளங்களுக்குச் சென்று தங்கியிருப்பதாகவும் தங்களது படகுகளுக்கு எரிபொருட்கள் கிடைக்காததால் அந்த கடற்படைத் தளங்களை மீனவர்கள் முற்றுகையிட முயற்சிப்பதாகவும் கூட வதந்திகள் கிளம்பின.

அந்த நிலைவரங்களுக்கு முற்றிலும் வேறுபட்ட முறையில், கடந்த வாரம் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அரசியல் கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் தலைவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்புப் படைகளுடன் மோதுவதற்கு விரும்பவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேறிச் செல்லமுடியாதவாறு பொலிஸார் தடைகளை போட்ட இடத்திலேயே போராட்டத்தை அந்த தலைவர்கள் கைவிட்டனர். மாணவர்களும் தீவிரபோக்குடைய அரசியல் செயற்பாட்டாளர்களும் அவர்களை நோக்கி கூச்சலிட்டு கேலிசெய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பொலிஸாரின் தடைகளை தாங்கள் தகர்த்து விழுத்தும்போது அந்தத் தலைவர்கள் தங்களுடன் இணைந்து நிற்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

வன்முறைக்கு வழிவகுக்கக்கூடிய மோதலை தவிர்த்ததன் மூலம் பிரதான போக்கு அரசியல் தலைவர்கள் அமைதியைப் பேணினர். ஆனால், நாட்டு மக்களை வறுமைப்படுத்திய அநீதியான செயல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமையை பேணிக்காக்க அவர்கள் தவறிவிட்டார்கள்.

மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை தங்களது முதல் முன்னுரிமையாகக் கருதுபவர்கள் மக்கள் போராட்டங்களை அனுமதிக்க மறுத்து ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்து தடுத்துவைத்து துன்புறுத்தும் அரசாங்கத்தின் செயலை கடுமையாக கண்டனம் செய்கின்றனர். கடந்தவார ஆர்ப்பாட்டத்துக்கு முன்னதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசியமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறக்கூடியதாக பொலிஸ் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை பொலிஸார் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்திக் கேட்டிருந்தது. அமைதிவழிப் போராட்டத்தை நடத்துவதற்கு அனுமதியைப் பெறுமாறு பொலிஸார் தங்களுக்கு அறிவுறுத்தியது குறித்து தொழிற்சங்கங்களும் மக்கள் அமைப்புகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றதை அடுத்தே அவ்வாறு அது வலியுறுத்தியது.

பொலிஸ் ஒழுங்குவிதிகளின் 77ஆவது பிரிவின்படி அமைதிவழிப் போராட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. இலங்கையின் அரசியலமைப்பே நாட்டின் அதியுயர் சட்டம் என்றும் அடிப்படை உரிமைகளை மீறுவது பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும் என்றும் ஆணைக்குழு எச்சரித்தது.

மறுபுறத்தில், இலங்கையின் 6 முக்கிய வர்த்தக சம்மேளனங்கள் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்கள், பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாதிக்கும் என்பதால் போராட்டத்தைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்தன. ஆர்ப்பாட்டங்களினால் ஏற்படக்கூடிய எதிர்மறையான விளம்பரம் பொருளாதார மீட்சிக்காக குறிப்பாக, சுற்றுலாத்துறையை மீட்டெடுக்க முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை தடம்புரட்டிவிடும் என்று அந்த சம்மேளனங்கள் கூறின.

இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை இளம் தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனம், இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம், கைத்தொழில் மற்றும் வர்த்தக பெண்கள் சம்மேளனம் ஆகியவையே கூட்டறிக்கையை வெளியிட்டவையாகும்.

அரசியல் உறுதிப்பாடே இன்றைய தேவை என்ற எடுத்துரைப்பின் மூலமாக தற்போதைக்கு பொதுப் பிரசாரப் போராட்டத்தில் அரசாங்கம் வெற்றியடைகின்றதுபோன்று தெரிகிறது. வரிக்குறைப்புகள், இரசாயன பசளை வகைகளுக்கு தடை, பாரிய ஊழல் மோசடிகளை கண்டும் காணாமல் இருந்தமை போன்ற முன்னைய அரசாங்கத்தின் செயற்பாடுகளின் விளைவாக 70 சதவீதத்துக்கும் அதிகமான பணவீக்கமும் 100 வீதம் உணவுப் பணவீக்கமும் ஏற்பட்ட பின்புலத்தில் நோக்கும்போது பொருளாதார மீட்சிக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டிய தேவை மறுதலிக்க முடியாததோர் உண்மையாகும்.

தற்போதைய சூழ்நிலையில் அரசியல் உறுதிப்பாட்டுக்கான தேவை குறித்த வர்த்தக சம்மேளனங்களின் வலியுறுத்தல் முற்றிலும் உண்மையே. வறியவர்களைப் பொறுத்தவரையிலும் சரி பணக்காரர்களைப் பொறுத்தவரையிலும் சரி பொருளாதார மீட்சி அவசியம். அதற்கு அரசியல் உறுதிப்பாடு முக்கியமானது. ஆனால், அரசியல் உறுதிப்பாடு தேவை என்பது ஒருபுறமிருக்க, சர்வதேச நாணய நிதியம் காலத்தை இழுத்தடிப்பது நிலைவரங்கள் நாம் நினைப்பதுபோன்று மேம்பாடு அடைவதாக இல்லை என்பதையே உணர்த்துகிறது.

தற்போதைய சஞ்சலமான நிலைமையை சிறப்பாக விளக்கக்கூடிய மாற்று கருத்தாடல் ஒன்று இருக்கிறது. ஆனால், அது தற்போது மௌனப்படுத்தப்பட்டிருக்கிறது. ‘அரகலய’ போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கையொன்று எழுந்தது. தேசிய பொருளாதாரத்தை வங்குரோத்து அடையச்செய்தவர்கள் தண்டிக்கப்பட்டு, அவர்கள் சூறையாடிய சொத்துகள் கைப்பற்றப்பட்டு தேசிய திறைசேரியிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று இளம் போராட்டக்காரர்கள் கோரினார்கள்.

ஆனால், போராட்டங்கள் அடக்கியொடுக்கப்பட்டு அதன் தலைவர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில், பொறுப்புக்கூறல் பற்றிய பிரச்சினைகளுக்கு அரசியல் கட்சிகளோ அல்லது வர்த்தக சம்மேளனங்களோ இப்போது முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை. ஊழலுடன் வாழவேண்டிய தேவை ஏதோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுபோல நிலைமை இருக்கும் துரதிர்ஷ்டம்.

அந்த பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை இப்போது அக்கறைகொண்ட சிவில் அமைப்புகளும் தனிநபர்களும் நீதிமன்றங்களை நாடி கையாள்வதையே காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு வழக்கை விசாரணை செய்வதற்கு ஏற்றுக்கொண்டிருக்கும் உயர்நீதிமன்றம் அரசாங்கத் திணைக்களங்கள் அறிக்கைகளையும் கேள்விகளுக்குப் பதில்களையும் தரவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

போராட்ட இயக்கத்தை ஒடுக்கியதன் மூலமும் எரிபொருள் நிலையங்களின் முன்பாக வாகன வரிசைகளை இல்லாமல் செய்ததன் மூலமும் வழமைநிலை ஏற்பட்டதைபோன்ற ஒரு வெளித்தோற்றத்தை காண்பிப்பதில் அரசாங்கம் கண்டிருக்கும் வெற்றி மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார இடர்பாடுகளை மறைக்கிறது. போராட்டங்கள் அடங்கிப்போன பிறகு அநுராதபுரத்திலும் குருநாகலிலும் சமூகத்தலைவர்களுடன் நடத்திய சந்திப்புகள் வழமைநிலைத் தோற்றம் ஒரு ஏமாற்று என்பதை தெளிவாக காட்டுகின்றன. ஆளும் கட்சியின் கோட்டைகளாக விளங்கும் இந்த இரு பகுதிகளிலும் அரசாங்கத்தின் மீது கடுமை
யான அதிருப்தி நிலவுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தாங்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார இடர்பாடுகள் குறித்து மக்கள் தெரிவித்த கருத்துகள், என்னதான் வர்த்தக சம்மேளனங்களின் நல்லெண்ணமும் புரிந்துணர்வு இருந்தாலும், அரசாங்கத்துக்கு தீமைக்கான முன்னறிகுறிகளாகவே தெரிகின்றன.

தங்கள் வயல்களுக்குத் தேவையான பசளையில் மூன்றில் ஒரு பங்கே கிடைக்கிறது என்று விவசாயிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத் தலைவர்கள் கூறுகிறார்கள். விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகளின் விலைகள் கடுமையாக அதிகரித்துவிட்ட நிலையில், தங்களின் செலவும் விளைச்சலின் பெறுமதியும் கூட சமமானதாக அமையக்கூடிய நிலை இல்லை என்று அவர்கள் கணிப்பிட்டுகிறார்கள்.

ஞாயிறு பாடசாலை சிறுவர்கள் காலையில் மயங்கி விழுகிறார்கள். அவர்கள் காலையில் சாப்பிடுவதில்லை என்று ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் கூறுகிறார்கள். முன்னர் அவர்கள் சாப்பிட்ட பிஸ்கட்டுகளைக்கூட வாங்குவது இப்போது கட்டுப்படியாகாமல் போய்விட்டது. பிஸ்கட் கம்பனிகள் விலைகளை மூன்று, நான்கு மடங்கால் அதிகரித்துவிட்டன. இந்தப் பிரச்சினைகள் ஆர்ப்பாட்டங்களைபோன்று வெளியில் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால், சமுதாயத்தின் அடிமட்டத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு இல்லை என்பதை அவை உறுதிசெய்கின்றன.

பிரதான போக்கு எதிரணிக் கட்சிகளினால் நடத்தப்படுகின்ற போராட்டங்கள் ஜனநாயகத்தின் ஓர் அடிப்படை பாகமாகும். அரகலயவின் முதற்கட்டம் இந்த தந்திரோபாயத்தின் ஒரு தெளிவான உதாரணமாகும். அது மக்களை ஒன்றிணைத்தது. மக்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவதற்கான ஒரு வழிவகையாக அது அமைந்தது. அது இலங்கை மக்களினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்த்தது.

மறுபுறத்தில், பிரச்சினைகளை அடக்குவது பின்னர் ஒரு கட்டத்தில் அவை வெடிப்பதற்கே வழிவகுக்கும். பிரச்சினைகளைக் கையாண்டு உணர்ச்சியும் பதற்றமும் பெருகுவதைத் தடுப்பது நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் நிலைபேறான தன்மைக்கும் நல்லது. போராட்டக்காரர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், பாதுகாப்புப் படைகள் முட்டுக்கொடுத்து சீரில்லாத முறையில் சட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தை பாதுகாக்கின்ற ஆபத்தான நிலையே உருவாகும்.

## நக்கல் நமசிவாயம்

300 பேர் இலங்கையிலேர்ந்து கப்பலில பாதுகாப்பா, சட்டவிரோதமா வியட்நாமுக்கு போயிருக்கிறாங்கள் எண்டதால கேரளாவிலேர்ந்து கஞ்சா வாறது ஒண்டும் புதுமையில்ல பாருங்கோ...



## இன்றைய நாளில்...

- ★ 1867 – ஜப்பானின் கடைசி இராணுவ ஆட்சியாளர் ஆட்சியை ஜப்பானியப் பேரரசரிடம் ஒப்படைத்தனர். மெய்சி மீள்விப்பு ஆரம்பமானது.
- ★ 1913 – மகாத்மா காந்தி கைதுசெய்யப்பட்டு 9 மாதச் சிறைத்தண்டனையடைந்தார்.
- ★ 1921 – எல்பர்ட் ஐன்ஸ்டைன் ஒளிமின் விளைவை விளக்கியமைக்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- ★ 1965 – கத்தோலிக்க உழைப்பாளர் இயக்கத்தைச் சேர்ந்த ராஜர் அல்லன் என்பவர் வியட்நாம் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக்கிய நாடுகள் அவைக்கு முன்னால் தீக்குளித்து மாண்டார்.
- ★ 1967 – அப்பல்லோ திட்டம்: நாசா அப்பல்லோ 4 ஆளில்லா விண்கலத்தை ஏவியது.
- ★ 1990 – நேபாளத்தில் புதிய மக்களாட்சி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.
- ★ 1994 – டார்ம்சிட்டாட்டியம் என்ற தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- ★ 2000 – உத்தராஞ்சல் மாநிலம், இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டது.
- ★ 2005 – வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற ஐரோப்பாவின் விண்கலம் கசக்கஸ்தான், பைக்கனூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்டது.
- ★ 2012 – கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் காவலர்கள் மற்றும் கைதிகளுக்கிடையே இடம்பெற்ற மோதலில் 27 பேர் கொல்லப்பட்டனர்.

## 08.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 120 2035 | 131 34 0 |
| கனேடியன் டொலர் | 154 770 | 166 1120 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 37 8 5 | 40 8 66 |
| யூரோ | 247 672 | 262 7524 |
| ஜப்பான் யென் | 1 3306 | 1 4343 |
| சிங்கப்பூர் டொலர் | 144 5 64 | 155 2880 |
| ஸ்ரேலிங் பவுன் | 301 8215 | 318 2 31 |
| சுவிஸ் பிரான்ங் | 25 8065 | 267 2565 |
| ஐ.அ.டொலர் | 25 7782 | 260 57 8 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853 016 |
| குவைட் | குவைட் தினார் | 0,063 326 |
| ஓமான் | ஓமான் றியால் | 833 0 57 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 3145 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6223 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8516 |

# சில்வெஸ்டர் கல்லூரியின் கலை விழா நிகழ்வு இன்று

(இக்பால் அலி)

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் தமிழ் இலக்கிய சங்கத்தின் கலைஞானி 22ஆவது கலை விழா இன்று 9 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் டி.பி.ஜி.ஐ. தென்னக்கோன் தலைமையில் நடைபெறும்

பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பிரதான நூலகர் ஆர். மகேஸ்வரன், கௌரவ அதிதிகளாக மத்திய மாகாண கல்விப் பணிமனையின் உதவிப் பணிப்பாளர் எம்.பி. விக்னேஸ்வரன், முன்னாள் கண்டி மாநகர சபை உறுப்பினர் எஸ்.மலர்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

# விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றக் கோரி அரச அதிபருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்



யாழ்ப்பாண மாவட்டத்தின் 13 கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் தேவை கருதி, உரிய காலப்பகுதியில் அவர்களுக்கான மண்ணெண்ணெயையும், பசளைகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த மாதம் 23, 29, 30ஆம் திகதிகளில் மயிலிட்டி, வடமராட்சி, அத்தாய் மற்றும் தீவகப் பகுதி விவசாயிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அக் கலந்துரையாடல்களின்போது மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளால் அவருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை மேற்கோள் காட்டியே குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சங்கானையில் இடம்பெற்ற 'அதிகாரம்' நூல் வெளியீடு







சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயத்தின், அரசறிவியல் மன்றத்தினால் வெளியிடப்படும் 'அதிகாரம்' நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நேற்றைய தினம் (08) பாடசாலையின் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

விருந்தினர்கள் மாலை அணிவித்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அழைத்துவரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதம விருந்தினரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நூலை வெளியிட, தொழிலதிபர் ஆ.குணசேகரம் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

பாடசாலை அரசறிவியல் மன்றத்தின் தலைவர் செல்வன் யோ.அலெக்சன் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்



ஈஸ்வரபாதம் சரவணபவன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் விருந்தினர்கள், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக ஹிருணிகா பரபரப்புக் குற்றச்சாட்டு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தி மகளிர் பிரிவின் தேசிய அமைப்பாளருமான ஹிருணிக்கா பிரேமச்சந்திர இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போராட்டத்தின்போது தாம் உட்பட பல பெண்கள் துன்புறுத்தப்பட்டதாக குறித்த முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற முறையில் தான் போராட்டத்தில் கலந்துகொண்ட போது, தன்னுடன் வந்த இரண்டு பெண்களை பொலிஸ் அதிகாரிகள் தகாத வார்த்தைகளால் திட்டியதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக இதுபோன்ற போராட்டங்களில் சில தள்ளுமுள்ளுகளும் இருக்கும், ஆணோ பெண்ணோ என்பது முக்கியமல்ல, அவர்கள் தற்செயலாக ஒருவரையொருவர் தொடுகிறார்கள்.

இதுபோன்ற சூழ்நிலைகளில் எங்களிடம் சுய கட்டுப்பாடு உள்ளது. ஆனால், பொலிஸார் வேறுவிதமாக நடந்துகொண்டார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வீடியோ காட்சிகள், குற்றஞ்சாட்டப்படும் பொலிஸாரின் பெயர்கள் மற்றும் அவர்களின் எண்கள் தன்னிடம் இருப்பதாகவும் ஹிருணிக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.



**சுகாதார இராஜாங்க அமைச்சராக இருந்தபோது புத்தள மாவட்ட வைத்திய சாலையை பல கோடி ரூபாசெலவில் அபிவிருத்தி செய்தமைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புத்தளத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான முஹம்மட் நியாஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பைஷல் காசிமுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கினார்.**

**(படம் - கே.ஏ.ஹமீட்.)**

# பூநகரியில் அமையவுள்ள சீமெந்து தொழிற்சாலை

## அமைச்சர் டக்ளஸ் பேச்சு





டோக்கியோ சிமென்ட் நிறுவனத்துக்கு சொந்தமான கிளை ஒன்று பூநகரியில் நிறுவப் படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை தொழிற்சாலை உயர் அதிகாரிகள் குழுவுடன் நடைபெற்றது.

வடமாகாணத்தில் வீடுகளை நிர்மாணிப் பதற்கும், சீமெந்து தொடர்பான தொழில்களில் ஈடுபடும் மக்களுக்கும் வசதியாக பூநகரி பிரதேசத்தில் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டு அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கட்டுமானத் துறையில் பணிபுரியும் பலர் வேலையிழந்துள்ளதை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளதாகவும்,

இவ்வாறான செயற்றிட்டங்களின் மூலம் நிர்மாணத்துறையை மீண்டும் உயர்த்த முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கடவுச்சீட்டு விநியோகம் தற்காலிக இடைநிறுத்தம்

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் கணினி கட்டமைப்பில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளமையினால் அதன் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. .

இதன் காரணமாக கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுமென திணைக்களப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

ஆகையால், மறுஅறிவித்தல் வரை கடவுச்சீட்டுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் கணனி கோளாறு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளம் வயதில் அரசியல் சாணக்கியத்துடன் மக்கள் பணியாற்றும் ஜீவன் தொண்டமான்






இளம் வயதில் அரசியல் பிரவேசம் செய்வது புதிய விடயமல்ல. ஆனால், மிகவும் இளமையான பருவத்தில் இலங்கை அரசாங்கத்தில் ஓர் இராஜாங்க அமைச்சராக பொறுப்பேற்றிருந்தது மிகவும் அபூர்வமான விடயம்.

அப்படி ஒரு வாய்ப்பைப் பெற்றிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இதுவரையிலும் சாதுரியமாக அரசியல், தொழிற்சங்கப் பணி செய்து வருகின்றார்.

இது பெருந்தோட்ட சமூகத்திற்கு கிடைத்த கௌரவமாகவே கொள்ளப்பட வேண்டிய விடயம். சரியான தருணத்தில் தொலைநோக்கோடு தொழிற்சங்கப் பணியில் ஈடுபடுத்தியதன் மூலம் தனது சாணக்கியத்தை நிலைநாட்டியவர் தந்தையாரான அமரர் ஆறுமுகன் தொண்டமான்.

தமக்கு கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைக்கொண்டு குறுகிய காலத்தில் முழு மலையகத்தையும் தன்பால் ஈர்த்துக்கொண்டவர் ஜீவன் தொண்டமான். இதன் பெறுபேறாக இன்றைய அரசாங்கத்தின் நம்பிக்கை, மலையக பெருந்தோட்ட நலன் சார்ந்த திட்டங்களை இவர் பொறுப்பில் வழங்கியிருப்பதாகும். அவரின் அர்ப்பணிப்பான முயற்சியின் பயனாகவே பல முன்னேற்றகரமான திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

1000 ரூபா சம்பளத்தைப் பெற்றுத்தந்து தந்தையின் கனவை நனவாக்கியவராவார். தேசிய மட்ட அரசியல் தலைமைகளோடு மிக நெருக்கமான தொடர்புகளை வலுப்படுத்திக்கொண்டும், தமிழக அரசியல் தலைவர்களோடு உறவுகளை பேணுவதிலும் தனது கவனத்தை செலுத்தி வருகின்றார் - வந்திருக்கின்றார்.

அண்மைக்காலத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடனான சந்திப்பின்போது தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகள் தொடர்பாகவும், மலையக மக்களுக்கான அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி மேம்பாட்டிற்கான உதவிகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் அமையவுள்ள பல்கலைக்கழகத்திற்கான இந்திய அரசாங்கத்தின் உதவிகள் மற்றும் உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியமை இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டியதோர் அம்சமாகும்.

மலையகத்தின் இளைய தலைமுறை நாயகனாக அவர் வலம் வருகின்றார். இளம்வயதிலேயே அனுபவ முதிர்வை வெளிக்காட்டும் அவர், மலையக சமூகவியல் மாற்றத்திற்கான முன்னெடுப்புகளை துணிச்சலுடன் மேற்கொண்டு வருவதன் மூலம் நம்பிக்கை விடிவெள்ளியாகத் திகழ்கின்றார்.

இன்று அவரது 28ஆவது பிறந்த நாளில் இறையாசி கிட்ட இறைவனைப் பிரார்த்தித்து நாமும் வாழ்த்துகின்றோம். அவரின் இடைவிடாத முயற்சிக்கும் அயராத உழைப்பிற்கும் சகலரும் ஒன்றிணைந்து கரம் கொடுப்போம்.

**தேவதாஸ் சவரிமுத்து**
**சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்**
**இ.தொ.கா.**

திகதி 07.11.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4932
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.6,477,390.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 3 6 6 7 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.39,482,771.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3174
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.2,568,960.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 08 24 28 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,413,789.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1387
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.1,198,540.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 4 4 6 5 0 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,483,352.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 962
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,497,920.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 27 32 34 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 132,006,576.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 241
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,849,480.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 10 16 49 60
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,637,382.20

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1280
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.1,854,360.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.279,809,074.00
P 23 07 13 14 36
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யுமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம்







(யாழ். கஜி)

விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யுமாறு கோரி வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு அமைப்பும் விவசாயிகளும் இணைந்து நேற்று (08) புலோலி கமநல சேவைகள் நிலையம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்ட மொன்றை முன்னெடுத்தனர்.

விவசாயிகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய், செயற்கை உரம், கிருமிநாசினி மற்றும் உள்ளீட்டுப் பொருட்களை வழங்குமாறு கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது போராட்டக் காரர்கள் பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு, மண்ணெண்ணெய் கொள்கலன்களை முன்னே வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## போதைப்பொருளை ஒழிக்கவென

# இராணுவத்தினர் ஆரம்பித்துள்ள வீதிச் சோதனை நடவடிக்கைகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு தேவை

## யாழ். இராணுவ கட்டளைத் தளபதி சந்தன தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தின் சோதனைச்சாவடிகளை அமைத்து, வீதி சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு தேவை – என யாழ்ப்பாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனைகள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இராணுவத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் முக்கிய பகுதிகளில் இராணுவ சோதனைச் சாவடிகளை அமைத்து, வாகனங்களை பரிசோதிப்பதன் மூலம் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் வியாபாரிகள் அல்லது போதைப்பொருள் பாவிப்போர் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால், அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு தகவல்களை தந்துதவுமாறு மக்களிடம் கோருகிறோம். தகவல்களின் இரகசியத்தன்மை பேணப்படும். அதனால் மக்கள் பயமின்றி இராணுவ முகாமில் தெரிவிக்கலாம்.

எமது எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி சமூகத்திலிருந்து போதைப்பொருளை ஒழிப்பதற்காகவே, வீதிச் சோதனைச்சாவடிகளை இராணுவத்தினர் அமைத்துள்ளனர். அதனால் பொதுமக்கள் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கோருகிறோம் – என்றார்.



# வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச மக்களுக்கு முக்கிய அறிவித்தல்



பொதுமக்கள் கவனத்திற்கு

2023ம் ஆண்டிற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதனால் தங்கள் கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் இருப்பின் தங்களின் வட்டார குழுவினூடாக தலைவர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, மன்னார் மதவாச்சி வீதி, செட்டிகுளம் எனும் அலுவலக முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவோ 15.11.2022ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தவிசாளர்,
பிரதேச சபை,
வெங்கலச்செட்டிகுளம்.
03.11.2022

(வவுனியா நிருபர்)

வவுனியா வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச சபைக்குட்பட்ட மக்களுக்கு முக்கிய கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் பிரதேச சபை தவிசாளர் சுப்பையா ஜெகதீஸ்வரன் (சிவம்) அறிவித்தலொன்றினை விடுத் துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளமையினால் தங்கள் கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் குழுவினூடாக தலைவர் வெங்கலச் செட்டிக்குளம், மன்னார் - மதவாச்சி வீதி, செட்டிக்குளம் எனும் அலுவலக முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவோ சமர்ப்பிக்கவும்.

குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலான சமர்ப்பிப்புகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச சபை தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு






(யாழ். நிருபர்)

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 11ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ் கைலாசபதி கலையரங்கில் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் வரவேற்புரையை ஸ்ரீ பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் யோக.தயாளனும், வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும், கருத்துரைகளை இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ச.முகுந்தன், சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.செல்வமனோகரன் ஆகியோரும் நன்றியுரையை பரமேஸ்வராக் கல்லூரி போஷகர் கனக.நமநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

# வவுனியா மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நகர சபையின் ஊடான விசேட செயலமர்வு



(வவுனியா நிருபர்)

வவுனியா நகரசபையின் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய நிகழ்வுகளின் வரிசையில் வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான "சிறந்த பெற்றோராதல்" எனும் தலைப்பில் மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் ஆதரவோடு கடந்த 05ஆம் திகதி வவுனியா பொது நூலக கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக வவுனியா தெற்குக் கல்வி வலய முன்பள்ளி உதவிப் பணிப்பாளர் வீ.பரஞ்சோதி, வவுனியா நகரசபையின் உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபன், நிருபா மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜெயக்கொடி, பிரதேச சிறுவர் நல உத்தியோகத்தர் சசிதரன், உளவள உத்தியோகத்தர் கார்த்திகா, பிரதம நூலகர் பாமினி, நூலகர் ரஞ்சிதமலர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களென அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

# சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை டிசம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் ஆரம்பம்

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)



2022-2023 ஆம் ஆண்டுக்கான சிவனொளி பாதமலை பருவகாலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெல்மதுளை ரஜமகாவிகாரை, இரத்தினபுரி பொத்குல் விகாரை விகாராதிபதி வெங்கமுவ ஸ்ரீ தம்மதின்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பருவகாலம் ஆரம்பிப்பது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் முகமாக, ஸ்ரீபாத நல்லதண்ணி கிராமசேவகர் காரியாலய கலாசார மண்டபத்தில் நேற்று (08) நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலகொட தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில், விகாராதிபதி வெங்கமுவ ஸ்ரீ தம்மதின்ன தேரர் மேலும் தெரிவித்தபோது,

பெல்மதுளை- கல்கொத்தாவ ரஜமகா விகாரையில் பதிவுபடுத்தப்பட்டுள்ள சமன்தேவ ஆலயப்பொருட்கள் மற்றும் பூஜைக்குத் தேவையான பொருட்கள் என்பன எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி குறித்த விகாரையில் இருந்து வெளியில் எடுக்கப்படும்.

பின்னர், 6ஆம் திகதி குறித்த பெட்டி வீதி உலாவாக கொண்டு வரப்பட்டு சிவனொளிபாத மலை உச்சியில் பிரதிஷ்டை செய்யப்படும். இரத்தினபுரி வீதி, இரத்தினபுரி - அவிசாவளை வீதி, பெல்மதுளை – பலாங்கொடை – பொகவந்தலாவை வீதி வழியாக கொண்டு செல்லப்படும்.

பலாங்கொடை – பொகவந்தலாவை வீதி, நோட்டன் பிரிட்ஜ் வழியாக நல்லதண்ணி வீதி திருத்தப்படாதுள்ளதால் அதனை திருத்தித் தருமாறு உரிய அதிகாரிகளை விகாராதிபதி கேட்டுக்கொண்டார்.

பருவகாலத்தின்போது குறித்த பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பினால் முன்கூட்டி அனுமதிபெற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# காதலை ஏற்க மறுத்த பெண்ணை உடலில் தீ வைத்துக்கொண்டு கட்டியணைத்த இளைஞன்

தனது காதலை யுவதி ஏற்றுக்கொள்ளாத விரக்தியில் இளைஞன் ஒருவர் தனக்குத்தானே தீவைத்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். தனது உடலில் தீவைத்த பின்னர், காதலியையும் கட்டியணைத்து கொலைசெய்ய முயன்றுள்ளார்.

எனினும், அங்கிருந்தவர்களால் யுவதி காயங்களுடன் காப்பாற்றப்பட்டுள்ளார். உடலில் தீ வைத்துக் கொண்டு ஓடிய இளைஞன் புகையிரதத்தில் மோதி உயிரிழந்தார்.

மொரட்டுவை பொலிஸ் பிரிவில் இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்தது. உயிரிழந்தவர் மஸ்கெலியாவில் வசிக்கும் எஸ்.மோகன்தாஸ் (28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யுவதியும் மஸ்கெலியா பிரதேசத்தில் வசிப்பவர். இவர்களுக்குள் சில காலமாக அறிமுகம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

23 வயதுடைய யுவதி கட்டுபெத்த, மொரட்டுவையில் உள்ள கடையொன்றில் காசாளராக கடமையாற்றியதாகவும், இளைஞனும் மொரட்டுவைக்கு அருகில் உள்ள இடத்தில் பணிபுரிந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தன்று குறித்த இளைஞன், யுவதி வேலை செய்யும் கடைக்கு வந்து, அவரிடம் தனது காதலை தெரிவித்துள்ளார். ஆனால் அந்த யுவதி காதலை ஏற்க மறுத்ததால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.


அப்போது அந்த இளைஞன் கடை உரிமையாளரிடம் கழிப்பறைக்கு செல்ல அனுமதி கேட்டுள்ளார். கழிவறைக்குள் சென்ற இளைஞன், உடலில் தீவைத்துக் கொண்டு வெளியே ஓடிவந்து, அந்த யுவதியை பிடித்து இழுத்து கட்டியணைக்க முயன்றுள்ளார்.

எனினும், அங்கிருந்தவர்கள் துரிதமாக செயற்பட்டு, யுவதியை விடுவித்ததுடன், தீயை அணைக்கவும் முயன்றனர்.

ஆனால், இளைஞன் புகையிரத தண்டவாளத்தை நோக்கி ஓடிச்சென்று, எதிரே வந்த புகையிரதத்தில் மோதி உயிரிழந்தார். விபத்தில் தீக்காயங்களுக்கு உள்ளான யுவதி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நிறையைக் குறைத்து பாண் விற்பனை

## நுகர்வோர் அதிகார சபையினருக்கு அறிவித்தும் கண்டுகொள்ளாத அதிகாரிகள்




(கண்டி செய்தியாளர்)

கண்டி, மடவளை நகரத்தில் பொதுவாக நிறை குறைந்த பாண்களே விற்கப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவித்தாலும் முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 275 முதல் 280 கிராம் வரையான அளவே பாரம் கொண்டதாக இருக்கும் இப்பாணின் நிறையை மேலுள்ள இலத்திரனியல் தராசு காட்டுகிறது. இது 140 ரூபாவிற்கு விற்கப்பட்டபோதும் தமக்குப் போதியதாக அது இல்லை எனப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

# சிறுபோக அறுவடையை ஸ்ரீ தலதா மாளிகைக்கு அர்ப்பணிக்கும் பூஜை







(கண்டி நிருபர்)

சிறுபோக அறுவடையின் சிறப்பான பகுதியை ஸ்ரீதலதா மாளிகைக்கு அர்ப்பணிக்கும் 'ஸ்ரீ தலதா சிறுபோக அறுவடை பூஜை' கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கத் தேரர் வேண்டருவே உபாலி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க, ஸ்ரீதலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் தேல மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# கண்டி மோப்ரே கல்லூரியின் நூற்றாண்டு தினத்தில் விசேட முத்திரை வெளியீடு





(இக்பால் அலி)

கண்டி மோப்ரே கல்லூரியின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு 25 ரூபா பெறுமதியான தபால் காகிதஉறை முத்திரை வெளியீடும் கண்டி நகரில் நடைபவனி ஊர்வலமும் அதிபர் திருமதி மனோரஞ்சனி கிங்ஸ்லி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், முன்னாள் குருநாகல் மறைமாவட்ட பங்குத் தந்தை கித்சிறி பெர்னாண்டோ கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது கொழும்பு மத்திய தபால் நிலையத்தின் பிரதித் தபால் அதிபர் ரஞ்ஜித் ரனசிங்க, கண்டி மத்திய மாகாண தபால் நிலையத்தின் பிரதிப் தபால் அதிபர் திருமதி சாமிசா டி சில்வா, பணிப்பாளர் லங்கா டி சில்லா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கண்டி மோப்ரே கல்லூரியில் இருந்து ஆரம்பித்த நடைபவனி ஊர்வலம் கண்டி புனித திரித்துவக் கல்லூரியின் ஜூனியர் விளையாட்டு மைதானம் வரை இந்த ஊர்வலம் சென்றடைந்தது. இதில் பழைய மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# அம்பியூலன்ஸில் ஆட்டிறைச்சி கடத்திய படையினர் கைது



இராணுவ அம்பியூலன்ஸில் ஆட்டிறைச்சியை ஏற்றிச்சென்ற சாரதி உட்பட இரு லான்ஸ் கோப்ரல் படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் மாதுரு ஓயா பூங்காவில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக மாதுருஓயா வனவிலங்கு அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் மாவனகம இராணுவ முகாமைச் சேர்ந்த இரண்டு லான்ஸ் கோப்ரல்கள் எனவும், அவர்கள் தெஹிஅத்தகண்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், மாதுருஓயா பூங்கா பராமரிப்பாளர் டி.எஸ்.ஜயசோம ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மாதுருஓயா ஹெனன்னேகலவிலிருந்து மாவனவெல இராணுவ முகாமிற்கு கறிவேப்பிலை கொண்டுசெல்லப்பட்டுள்ளதுடன், அவர்கள் அம்பியூலன்ஸ் மூலம் இறைச்சியை ஏற்றிச்சென்றதாக தகவல் கிடைத்ததையடுத்து, ஹெனன்னேகல வனஜீவராசிகள் காரியாலயத்திற்கு கிடைத்த தகவலையடுத்து, அம்பியூலன்ஸ் மற்றும் சந்தேகநபர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர் என ஜயசோம ரத்நாயக்க மேலும் கூறினார்.







கே/மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புதிய அங்கத்தவர் தெரிவும் கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ.ரஹ்மான் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் அதிபரோடு நடப்பு வருடத்துக்கான நிர்வாகிகள் பதினொரு பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இதில் கல்லூரியின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் எம்.நிஸ்தார், ஊடகவியலாளர் அமீர் ஹுசைன், கல்லூரி பழைய மாணவியர் என பலரும் கலந்து சிறப்பித்ததோடு, பிரதம அதிதியாக வெஸ்வூட் கல்லூரி அதிபரும் வளவளாருமான நயிம் மரிக்கார் உட்பட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (இக்பால் அலி )

# ஆற்றல்களை ஊக்குவிக்கவும் திறமைசாலிகளைப் பாராட்டவும் முன்மாதிரி காட்டிய நபி பெருமானார்

## தர்கா நகர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதி தெரிவிப்பு




(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேராசை கொள்வது, மனோ இச்சைப்படி நடப்பது, தன்னைத்தானே புகழ்ந்து கொள்வது போன்ற செயல்களை ரசூல் (ஸல்) அவர்கள் வெறுத்தார்கள். இதேபோன்று ஒருவரது முன்னால் புகழ்வதையும் நபியவர்கள் தடுத்துள்ளார்கள். அவ்வாறு புகழ்வதால் அவர் பெருமைப்படுவார் என்பதை அஞ்சியே நபி பெருமானார் இவ்வாறு வெறுத்தும் தடுக்கவும் செய்துள்ளார்கள். ஆனால், ஒருவரின் திறமை, ஆற்றல்களை ஊக்குவிக்கவும் பிறர் அவ்வாறு செயற்படத் தூண்டவும் நபிகளார் திறமைசாலிகளைப் புகழ்ந்து பாராட்டவும் முன்மாதிரி காட்டியுள்ளார்கள் என்று தர்கா நகர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதியும் கல்விமானுமான மௌலவி எம்.ஐ.எம்.சில்மி (னூரி) கூறினார்.

தர்கா நகரில் இயங்கும் லிவர்பூல் விளையாட்டுக் கழகத்தின் 35ஆவது வருட பூர்த்தி விழாவும் இப்பகுதியில் சமூக சேவைகளில் முன்னோடியாகத் திகழும் நஜீப் பின் அமீர் ஆலிம் ஹாஜியாருக்கு அமெரிக்காவின் சர்வகலாசாலை ஒன்றில் சமூக சேவைக்கான கலாநிதிப் பட்டம் வழங்கியமைக்காக அவரை பாராட்டி கௌரவிக்கும் விழாவும் தர்கா நகர் மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் மேற்படி விளையாட்டுக் கழகத்தால் கடந்த (5) சனிக்கிழமை மாலையில் நடத்தப்பட்டன. அதில் கௌரவ அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தக ஆபரண சங்க முன்னாள் தலைவரும் சீனன்கோட்டையின் பிரபல மாணிக்க வர்த்தகருமான கலாநிதி எம்.நிஸார் ஹாஜியார் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இவ்விழாவில் மௌலவி சில்மி தொடர்ந்து கூறியதாவது,

ஒருவரைப் புகழ்வதன் மூலம் அதனால் அவருக்கு பெருமை ஏற்படக்கூடாது. அவரது திறமை, ஆற்றல்களை ஊக்குவிக்கவும் அடுத்தவருக்கு முன்மாதிரி காட்டவும் புகழ்வதில் தப்பில்லை. உதாரணமாக, யுத்தங்களில் அபார ஆற்றல்களை வெளிப்படுத்திய காலித் இப்னு வலீத்(ரலி) அவர்களை அல்லாஹ்வின் வாள் என்று ரசூல்(ஸல்) அவர்கள் புகழ்ந்துள்ளார்கள். அதேபோன்று உஹது போரில் ஷஹீதாகப்பட்ட ஹம்சா(ரலி) அவர்களின் திறமைகளைக்கண்டு அவரை அல்லாஹ்வின் சிங்கம் என்று மாநபியவர்கள், புகழ்ந்த வரலாறுண்டு. மேலும் பெருமானாருக்கு வசைபாடி ஆயிரக்கணக்கான கவி பாடிய அரபிப் பெருங்கவிஞர் பின்னர் மாநபியைப் புகழ்ந்து கவிதைகள் வடித்தபோது நபி அவர்கள் தனது சால்வையைப் போர்த்தி கவிஞரை வாழ்த்தி பாராட்டிய சம்பவமும் எமக்கு முன்மாதிரியாகவுள்ளது. இதுவே கவிஞர் ஒருவருக்கு உலகில் முதன்முதலில் பொன்னாடை போர்த்தி கௌரவித்த நிகழ்வாகும். இந்த வகையில் லிவர்பூல் விளையாட்டுக் கழகம் களுத்துறை மாவட்டத்தின் சேவைச் செம்மல் நஜீப் ஹாஜியாருக்கு விழாவெடுத்து கௌரவிப்பது காலத்தின் தேவையாகும் - என்றார்.

இவ்விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட கொழும்பு மட்டக்குளி ஹம்ஸா வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் எம்.இர்பான் மாஸ்டர் மற்றும் பேருவளை பிரதேச சபை உறுப்பினரும் மூத்த அரசியல்வாதியுமான ஏ.ஆர்.எம்.பதியுதீன் உள்ளிட்ட பலரும் உரையாற்றினார்கள்.

லிவர்பூல் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.ஆர்.எம்.ஹில்மி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கலாநிதி நஜீப் ஹாஜியாருக்கு மேற்படி கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கலாநிதி நிஸாருக்கும் நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி எம்.எஸ்.எம். பாஸில்(அஷ்ரபி) துஆ பிரார்த்தனை நிகழ்த்தியதோடு பிரதேச சபை உறுப்பினர்களான பைஸான் நைஸர், ஹஷீப் மரிக்கார், முஹம்மது நபீல் மற்றும் உலமாக்கள், பேருவளை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் முஹம்மது ரிஸ்வான் ஹாஜியார்,செயலாளர் முஹம்மத் சினான் உட்பட பிரதேச மக்கள் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் இலங்கையின் முயற்சிக்கு கொரிய ஜனாதிபதியின் தூதுவர் பாராட்டு

COP- 27 மாநாட்டில் பங்குபற்றுவதற்காக எகிப்திற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கொரிய ஜனாதிபதியின் காலநிலை மற்றும் சுற்றாடல் விவகாரங்களுக்கான விசேட தூதுவரும் அந்நாட்டுத் தூதுக் குழுவின் தலைவியுமான நா குயூங் வொனுக்கும் (Na Kyung-Won) இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் (07) பிற்பகல் நடைபெற்றது.

காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ள இலங்கை எடுத்துள்ள முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்த நா குயூங் வொன், நாட்டில் காபன் வெளியேற்ற வீதம் ஏற்கனவே குறைவாக இருக்கின்றபோதிலும் அதன் வெளியேற்றத்தை மேலும் குறைக்க இலங்கை எடுத்துவரும் நடவடிக்கைகளுக்காகவும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் தொடர்பான சவால்களை முறியடிப்பதற்கு திறன் மேம்பாடு இன்றியமையாதது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவ வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, காலநிலை மாற்றம் குறித்து அனைவரும் அறிவு பெறக்கூடிய உயர்கல்வி நிறுவனமாக இது இருக்கும் என்றும் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் தாம் பொது நலவாய செயலகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஏற்கனவே கலந்துரையாடியதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் ஒப்புதலையும் பெற்று இதனை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# யாழ். நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து உள்ளூர் - வெளியூர் பஸ் போக்குவரத்து

## நேற்றுமுதல் ஆரம்பம்



யாழ். நகரப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூருக்கான தனியார் பயணிகள் போக்குவரத்து சேவைகள் நேற்றுக் காலைமுதல் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றுக் காலை மாநகர முதல்வர் வி.மணிவணணன், ஆணையாளர் இத.ஜெயசீலன், தனியார் பஸ் சங்கங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள், பொலிஸார் இது தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டதுடன், தற்போது ஏற்படுகின்ற சில குறைபாடுகளை நிவர்த்திசெய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ். நகர்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளை நிவர்த்திசெய்யும் முகமாக புதிய பஸ் நிலையத்திலிருந்து தங்களது சேவைகளை ஆரம்பித்த அனைத்து தனியார் சங்கங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் பஸ் உரிமையாளர்களுக்கும் யாழ்ப்பாண போக்குவரத்து பொலிஸாருக்கும் மாநகர முதல்வர் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்

தற்போதைய போக்குவரத்து சேவைகளில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை இனங்கண்டு அடுத்த வாரம் அது தொடர்பில் ஆராய்ந்து இத் திட்டத்தை மேம்படுத்துவதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

# யாழ். கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் நாகவிகாரை விகாராதிபதியுடன் பேச்சு



யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதி மீகஹகந்துர சிறிவிமல தேரரை கடலட்டைப் பண்ணை விடயம் தொடர்பாக சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் குறித்த சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் சம்மேளனத்தின் தலைவர் அ.அன்னராசா, உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும்போது அதனை ஆய்வுக்குட்படுத்தி மேற்கொள்ளல், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கடலட்டைப் பண்ணை தொடர்பாக பேசுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அரசியல் தலைவர்கள் உட்பட அரசாங்க அதிகாரிகள் கடலட்டைப் பண்ணை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில், மதத் தலைவர்களை சந்தித்து அவர்கள் மூலம் அரசியல் தலைவர்களை அணுகுவதற்காக இந்த நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்வதாக கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்ததுடன், சகல மதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவும் தீர்மானித்துள்ளதாக தெரிவித்தனர்.

# நிலையியற் குழுக்கள் நியமனம் தொடர்பில் சபாநாயகர் அறிவிப்பு



நாடாளுமன்றத்தில் நியமிக்கப்படவுள்ள 17 துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கான சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று (08) அறிவித்தார்.

அதேபோன்று, நியமிக்கப்படவுள்ள குழுக்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்துக்கு வந்து அனைத்துப் பணிகளையும் ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆதரவை வழங்குமாறு சபாநாயகர் அனைத்து உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய, நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு மற்றும் தெரிவுக் குழுக் கூட்டங்களில் இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு (Committee on Banking and Financial Services), பொருளாதார உறுதிப்படுத்தல் குழு (Committee on Economic Stabilization) மற்றும் வழிவகைகள் பற்றிய குழு (Committee on Ways and Means) ஆகிய மூன்று குழுக்களை நியமிப்பது தொடர்பிலும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட ஏற்பாடாகியிருந்தது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 71ஆவது ஊடக செயலமர்வு, கொழும்பு அல்-ஹிக்மா கல்லூரியில் '21ஆம் நூற்றாண்டில் ஊடகம்' என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற முழு நாள் கருத்தரங்காக கொழும்பு அல்-ஹிக்மா கல்லூரியின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவி புர்கான் பீ. இப்திகார் தலைமையில் நடைபெற்ற இவ்வூடகக் கருத்தரங்கில், முஸ்லிம் மீடியா போரத்தின் முக்கியஸ்தர்களான முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம்.அமீன், தாஹா முஸம்மில், எம்.ஏ.எம்.நிலாம் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். (அஷ்ரப் ஏ சமத்)

# மீலாதுன் நபி விழா பேருவளையில்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை மருதானை அஹ்லுஸ் ஸுன்னா இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டிலான மாபெரும் மீலாதுன் நபி திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் இரவு 11 மணிவரை பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலுக்கு அருகாமையில் நடைபெறும்.

மேற்படி அமைப்பின் தலைவர் மௌலவி என்.என்.எம்.நிஷாத் (அலவி) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கொழும்பு உம்முஸாவியா பிரதம இமாமும் அஜ்வாத் அல்-பாஸி அரபுக் கல்லூரி அதிபருமான கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.அஹ்மத் (மஹ்லரி) பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

இரத்மலானை தாலயம்பாவா பள்ளிவாசல் இமாம் மௌலவி முஹம்மத் ஸிராஜ் நஜாஹி (அல்-காதிரி) பேருவளை சீனன்கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலி கலாபீட பணிப்பாளர் மௌலவி பஸ்லான் (அஷ்ரபி - பி.ஏ.அல் யமினி) ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாக கலந்துகொள்வர் என மௌலவி இர்ஷாத் அல் பாஸி ஷாதுலி தெரிவித்தார்.

நிகழ்வில் இஸ்லாமிய கலை,கலாசார நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்படவுள்ளதோடு மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

நிகழ்வில் உலமாக்கள், மருதானை அஹ்லுஸ் ஸுன்னா இளைஞர் அமைப்பின் உறுப்பினர்கள், பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்வர்.





பொல்கஹவெல, அன்பாஸ் அமால்தீன் அமையத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இஸ்லாமிய போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, கடந்த வெள்ளிக்கிழமை (04) பொல்கஹவெல நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

# 13 ஆண்டுகளின் பின் இறுதிப் போட்டிக்குள் நுழையுமா பாகிஸ்தான்?

## முதல் அரையிறுதியில் நியூசிலாந்து – பாக். அணிகள் இன்று பலப்பரீட்சை




(ஏ.அகீல் சிஹாப்)

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் முதல் அணியைத் தெரிவுசெய்வதற்கான முதலாவது அரையிறுதி ஆட்டம் இன்று சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது. இரவுநேர போட்டியாக இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் கடந்த உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் ஆடிய நியூசிலாந்து அணியும், அரையிறுதிப் போட்டியில் ஆடிய பாகிஸ்தான் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 16ஆம் திகதிமுதல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது. அந்தவகையில் சுப்பர் 12 சுற்றில் குழு ஒன்று மற்றும் குழு இரண்டிலிருந்து முதல் இரு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அதன்படி குழு ஒன்றில் முதலிடத்தைப் பிடித்த நியூசிலாந்து அணியும், குழு இரண்டில் இரண்டாவது இடத்தைப் பிடித்த பாகிஸ்தான் அணியும் இன்றைய தினம் நடைபெறுகின்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் இதுவரையில் நேருக்கு நேர் மோதியே இருபதுக்கு 20 போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகையில், 2007ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் இரு அணிகளுக்கிடையில் 28 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 17 போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தும் நிலையில், நியூசிலாந்து அணி 11 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருக்கிறது.




இந்தாண்டுக்கான உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் கடந்த ஒக்டோபர் மாதம் நியூசிலாந்தில் நடைபெற்ற பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதிய முக்கோண இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் இறுதிப் போட்டியிலும் கூட நியூசிலாந்து அணியை வீழ்த்தி பாகிஸ்தான் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதிய இருபதுக்கு 20 உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்தும்போது, இரு அணிகளும் 6 போட்டிகளில் மோதியுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 4 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் அதேவேளை, நியூசிலாந்து அணி இரண்டு போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருக்கிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரிலும் கூட நியூசிலாந்து அணியை பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளினால் வீழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்று தொடர்ந்து இரண்டாவது தடவையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறுமா அல்லது பாகிஸ்தான் அணி 13 ஆண்டுகளின் பின்னர் இறுதிப் போட்டிக்கு முன்னேறுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



# எம்.ஏ.ஏ. சம்பியன் கிண்ணம் நிலாவெளி ஹிட் மாஸ்டர்ஸ் அணி வசமானது



(ஜிப்ரி எம். ஹிஷாம்)

திருகோணமலை, நிலாவெளி பிரதேச இளைஞர்களின் ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கத்தோடு நடத்தப்பட்ட 9 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று தினங்களில் நிலாவெளியில் நடைபெற்றது. லீக் முறையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் 9 அணிகள் பங்குபெற்றின.

எம்.ஏ.ஏ. பிஷிங் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.அலியின் அனுசரணையில் அல்-பதாஹ் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் அல்பத்தா முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அணிக்கு 9 பேர் கொண்ட எம்.ஏ.ஏ. சம்பியன் கிண்ணத்தின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் நிலாவெளி சுபர் கிங்ஸ் மற்றும் நிலாவெளி ஹிட் மாஸ்டர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய நிலாவெளி சுப்பர் கிங்ஸ் அணி 8 ஓவர் முடிவில் 31 ஓட்டங்களைப் பெற்றது. 32 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நிலாவெளி ஹிட் மாஸ்டர்ஸ் அணி 7.1 ஓவர் முடிவில் 36 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் பட்டத்தை முடிசூடியது. இரு அணிகளுக்கும் கேடயங்கள் மற்றும் பணப்பரிசு வழங்கப்பட்டதோடு, இறுதி ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரர், தொடர் நாயகன், சிறந்த களத்தடுப்பாளர், தொடரின் அதிகூடிய ஓற்றங்களைப் பெற்ற வீரர், தொடரின் அதிகூடிய விக்கெட்டுகளைப் பெற்ற வீரர் ஆகியோருக்கும் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வின் இறுதியில் பிரதேச இளைஞர்களின் ஒற்றுமையை கருத்திற் கொண்டு இவ்வாறானதொரு போட்டியை ஏற்பாடு செய்தமைக்காக எம்.ஏ.ஏ. பிஷிங் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.அலிக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஜப்பானின் வரலாற்றுச் சிறப்புமிக்க டிபெண்டர்

(ரமணி)

மாயா யோஷிடா, ஒரு பெண்ணின் பெயரைக்கொண்ட கடினமான டிபெண்டராவார். யோஷிடாவின் மூன்றாவது உலகக்கிண்ணப் போட்டி இது. மேலும் அணித்தலைவராக முதலாவது போட்டி. ஜேர்மனி, ஸ்பெயின், கோஸ்டாரிகாவை எதிர்கொள்ளும் ஒரு கடினமான குழு ஈஇல் ஜப்பான் உள்ளது.

34 வயதான அவர், ஜப்பானின் மறுக்கமுடியாத வீரராவார். 12 ஆண்டுகளில் 120இற்கும் மேற்பட்ட சர்வதேச போட்டிகளில் அவர் விளையாடினார். ஐரோப்பாவில் தனது நீண்ட கிளப் வாழ்க்கையில் உலகின் ஒரு பண்பட்ட மனிதராக வளர்ந்தார், சவுத்தாம்ப்டனில் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் செலவழித்து நிரந்தர இங்கிலாந்தின் வதிவிடத்தைப் பெற்றார்.

யோஷிடா 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சவுத்தாம்ப்டனை விட்டு வெளியேறிய சம்டோரியாவுடன் இத்தாலியில் இரண்டரை வருட காலத்திற்குப் பிறகு இந்த சீசனில் ஜேர்மன் அணியான ஷால்கேவுடன் சேர்ந்தார். கட்டாரில் முதல் முறையாக தனது நாட்டை காலிறுதிக்கு அழைத்துச் செல்வதில் அவர் உறுதியாக உள்ளார்.



# கல்முனை சஹ்றியன் 93/96 அமைப்பின் கிரிக்கெட் சமரில் ஸ்கை வோக்கர்ஸ் சம்பியன்




(எஸ். அஷ்ரப்கான், யு.கே.காலிதீன்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் சஹ்றியன் 93/96 அமைப்பினரின் வருடாந்த ஒன்றுகூடலும், புதிய ரீ-சேர்ட் அறிமுகத்துடன் மென்பந்து கிரிக்கெட் சமரும் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஸ்கை வோக்கர்ஸ், லைட்னிங் எவெஞ்சர்ஸ், தண்டர் கிங்ஸ் மற்றும் ரெயின்போ வோறியர்ஸ் ஆகிய 4 அணிகள் மோதிய இக் கிரிக்கெட் சமரில் 25 ஓட்டங்களால் ஸ்கை வோக்கர்ஸ் அணியினர் வெற்றிக்கிண்ணத்தை சுவிகரித்தனர். இறுதிப் போட்டியில் சிறப்பாட்டக்காரராக ஸ்கை வோக்கர்ஸ் அணியின் யூ.எல்.அஷ்ரப் தெரிவானார்.

இங்கு பிரதம அதிதியாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.ஜாபீர் கலந்துகொண்டார். நண்பர்கள் குழுமத்தின் கலை, கலாசார நிகழ்வுகள், சிறுவர் விளையாட்டுகள் என்பனவும் இங்கு அரங்கேறின. வெற்றிபெற்ற, திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு பரிசில்களும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# பாலியல் பலாத்காரம் செய்த பெண்ணின் கழுத்தை நெரித்த குணதிலக்க; வெளியான அதிர்ச்சித் தகவல்!



(ஏ. அகீல் சிஹாப்)

பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் கைதுசெய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவும், குற்றச்சாட்டை முன்வைத்த குறித்த இளம்பெண்ணும் படுக்கை அறையில் வாக்குவாதம் செய்ததாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அவுஸ்திரேலியாவின் பாலியல் குற்றங்கள் தடுப்புப் பிரிவு தெரிவித்தாக குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, குணதிலக்கவும் பாதிக்கப்பட்ட 29 வயதுப் பெண்ணும் ஒரு டேட்டிங் ஓவ் மூலமாக அறிமுகமாகியுள்ளனர். சில வாரங்களாக இருவரும் அதில் உரையாடி வந்தனர்.

கடந்த 2ஆம் திகதி இரவு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலுள்ள ஒரு பாரில் இருவரும் முதல் முறையாக நேரில் சந்தித்துக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் சிட்னியின் ரோஸ் பே பகுதியிலுள்ள இளம்பெண்ணின் வீட்டுக்குச் செல்வது என்றும் அங்கு பாலியல் உறவில் ஈடுபடுவது என்றும் இருவரும் ஒருமனதாக முடிவு செய்தனர். அதுபோல், அந்த வீட்டுக்குச் சென்றனர். அங்கு படுக்கை அறையில் இருவருக்கும் இடையே திடீரென மோதல் வெடித்தது. ஆணுறை அணிந்து பாலியல் உறவில் ஈடுபடுமாறு இளம்பெண் வற்புறுத்தினார். ஆனால், அதற்கு குணதிலக்க மறுத்தார். இதனால் வாக்குவாதம் எழுந்தது. ஒருகட்டத்தில் குணதிலக்க, இளம்பெண்ணின் கழுத்தை நெரித்தார். பாலியல் பலாத்காரம் செய்தார்.

அதைத்தொடர்ந்து இளம்பெண் அளித்த குற்றச்சாட்டின்பேரில் குணதிலக்க அவர் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

குணதிலக்க சர்ச்சையில் சிக்குவது இது முதல் முறை அல்ல. கடந்த சில ஆண்டுகளில் அவர் 4 முறை குற்றச்சாட்டுகளில் சிக்கினார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின்போது சக வீரர்களுடன் சேர்ந்து கொரோனா தடுப்புப் பாதுகாப்பு வளையத்தை மீறி வெளியே சுற்றிய குற்றச்சாட்டில் சிக்கி ஓராண்டு தடைக்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை அல்-ஹம்றா மாணவி பாத்திமா ஜஸ்னா தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்




(மருதமுனை நிருபர்)

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி பாத்திமா ஜஸ்னா முகம்மது வலீத் தேசிய மட்ட பேச்சுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார்.

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியின்போதே இவர் வெண்கலப் பதக்கத்தைப் தனதாக்கிக் கொண்டார்.

இவர் கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மாணவி கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாம் ஆண்டுக்கான சமூக விஞ்ஞான வினா விடைப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.வலீத் - அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறின்தாஜ் தம்பதியின் புதல்வியாவார். இம்மாணவி தேசிய மட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றதையிட்டு பாடசாலை அதிபர் ஐ.உபைதுல்லா பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களும் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துள்ளனர்.

# ஆசிரியர்களாகப் பணிபுரிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்குக!

## பட்டதாரிகள் ஒன்றிய கிழக்கு மாகாணத் தலைவர் வேண்டுகோள்

(கல்லடி நிருபர்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ 2020.09.02ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 53,000 பட்டதாரிகளுக்கு ஒரு வருடப் பயிற்சியின் அடிப்படையில் நியமனம் வழங்கியிருந்தார். அந்த நியமனம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் குறிப்பிட்ட சிலர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் பாடசாலைகளில் பயிற்சி ஆசிரியர்களாக இணைக்கப்பட்டு, தற்போது இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அவர்கள் இருப்பதாக பட்டதாரிகள் ஒன்றியத்தின் கிழக்கு மாகாணத் தலைவர் கணேசன் அதிரன் தெரிவித்தார்.

பட்டதாரிகள் ஒன்றியம் மற்றும் இலங்கை அரச ஆசிரியர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வூடகச் சந்திப்பு மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

அவர் அங்கு தொடந்து உரையாற்றுகையில்,

அந்தவகையில் கடந்த வருடம் அவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய பாடசாலைகளிலேயே நியமனம் பெற்றிருந்தார்கள். இந்நிலையில்,அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் நியமனத்துக்குள் உள்வாங்குவது தொடர்பாக ஏற்கனவே குறிப்பிட்ட சில மாதங்களுக்கு முன்பாக அந்தந்த மாகாண சபைகள் ஊடாக ஆசிரியர்களாக




உள்வாங்குவதற்கு நேர்முகத் தேர்வின் மூலம் அமைச்சரவை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு, நாளை நேர்முகத்தேர்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்ட நிலையில் அது திடீரெனக் கைவிடப்பட்டிருந்தது.

அதன்பின்னர் தேசிய கொள்கையாக இருக்கின்ற பப்சி மூலமாகத்தான் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக தற்போது இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான நிலையில் கல்வியமைச்சர் சுசில் பிறேமஜயந்த 2018, 2019, 2020 களில் நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நடத்தப்படவுள்ள பரீட்சைகளில் பங்குகொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பங்குபற்றினால், 2020ஆம் ஆண்டு நியமனம் வழங்கப்பட்டு, பாடசாலைகளில் இரண்டு வருடங்களாக ஆசிரியர் பயிற்சியில் இருக்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எந்தவிதமான அங்கீகாரமும் இதுவரை வழங்கப்படவில்லை. அவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருந்த போதிலும், ஆசிரியர் பணியைச் செய்துகொண்டு வருகிறார்கள்.

இது தொடர்பாக நாம் கடந்த மாதம் கல்வியமைச்சரை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

இந்நிலையில், போட்டிப் பரீட்சையில் இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தவறுவார்களாக இருந்தால், மீண்டும் அவர்கள் திணைக்களங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப் படுவார்கள். இவர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்க வேண்டுமாக இருந்தால், ஏற்கனவே அவ்வாறே செய்திருக்கலாம். இப்போது அவ்வாறு செய்யும் பட்சத்தில் இரண்டு வருடங்கள் அவர்கள் பணிபுரிந்த ஆசிரியர் பணி தேவையற்றதாகிவிடும். இது தொழில் சார்ந்த பயிற்சியாக அமையவில்லை. மாறாக, ஆசிரியர் பிரமாணக்கோவையில் சில விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதன்படி சேவை சார்ந்து 100 மணித்தியாலங்கள் ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருந்தால், அவர்களை நேர்முகத் தேர்வு மற்றும் பிரயோகப் பரீட்சையின் ஊடாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக கடந்த வருடங்களில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்தவர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கியமை அனைவரும் அறிந்த விடயமாகும். அதேவேளை, 2018ஆம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் தேசிய பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பணி புரிந்தவர்களை ஆசிரியர் நியமனத்துக்குள் பரீட்சையின்றி, நேர்முகத் தேர்வின் ஊடாக கொண்டுவந்தார்.

இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அதேவேளை, ஆசிரியர் சேவை சட்டக்கோவையில் குறிப்பிட்டபடி நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சை ஊடாக இவர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க முடியும். ஆகவே, பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குகின்றபோது ஏதேனும் ஒரு விடயத்தைக் கையாண்டு, அந்த ஆசிரியர் நியமனத்துக்குள் உள்வாங்கப்படவேண்டுமென்று எமது நாட்டின் கல்வியமைச்சரான சுசில் பிறேமஜயந்தவிடம் நாங்கள் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம். 35 என்ற வயதெல்லையை 45 ஆகக் குறைக்க கல்வியமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்தார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வீடமைப்புத் திட்டத்தை மீள ஆரம்பிக்க இம்ரான் எம்.பி. கண்காணிப்பு விஜயம்





(கிண்ணியா நிருபர்)

கடந்த நல்லாட்சி அரசு காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள நிலையிலுள்ள கிண்ணியா துவரங்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இரண்டு வீடமைப்புத் திட்டங்களை மீள ஆரம்பிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கான கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று முன்தினம் (07) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மேற்கொண்டார்.

இவ்விஜயத்தில் அல்-ஹிக்மத்துல் உம்மா பவுண்டேசன் பணிப்பாளர் பாத்திஹ் ஹஸ்ஸாலி, நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் சதாத் கரீம், ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அமைப்பாளர் எம்.டி.நசீர் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

கிழக்கு செய்திகள்
easttthamilan@gmail.com

# மொனராகலையிலிருந்து கல்முனை நோக்கி சர்வதேச நீரிழிவு தின சைக்கிள் அஞ்சலோட்டம்



(நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம்.சினாஸ், எம்.என்.எம்.அப்ராஸ்)

இம்மாதம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் நீரிழிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சைக்கிளிங் கிரீன் கழகமானது இலங்கை இள வைத்தியர்கள் சங்கம், வெல்லஸ்ஸவின் குரல், மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலை, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றுடன் இணைந்து மாபெரும் சைக்கிள் அஞ்சலோட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

மருதமுனை கமு/கமு/அல்-ஹிக்மா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் சைக்கிளிங் கிரீன் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட இலங்கை ஊவா-வெல்லச பல்கலைக்கழகப் பதிவாளர் எம்.எவ்.ஹிபதுல் கரீம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.எம்.றியாஸ், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வேலைத்தள பொறியியலாளர் எம்.எஸ்.எம்.பஸீல், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்கள்,

இந்த சர்வதேச நீரிழிவு தின சைக்கிள் அஞ்சலோட்டம் மொனராகலையில் ஆரம்பித்து தொம்பகஹவெல, சியம்பலாண்டுவ, வட்டினாகல, தமண, ஹிங்குறாணை, அம்பாறை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, மருதமுனை ஆகிய பிரதேசங்களினூடாக நடத்தவிருக்கின்றது. இந்த சர்வதேச நீரிழிவு தின சைக்கிள் அஞ்சலோட்ட இறுதி நிகழ்வு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. இந்த அஞ்சலோட்டத்தில் 18 வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன் மக்களுக்கு நீரிழிவு தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த அஞ்சலோட்ட நிகழ்வின் தொடர்ச்சியாக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலை, அம்பாறை வைத்தியசாலை நீரிழிவு பிரிவு, ரோட்டரி கழகம் ஆகியவற்றிலும் நீரிழிவு தொடர்பிலான சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், எக்கலோயா பகுதியில் வனபரிபாலன திணைக்களத்தின் 6000 - 7000 விதைப்பந்துகள் வீசும் நடவடிக்கையும் இடம்பெறவுள்ளது.

## போடியார் புலம்பல்!



***சுமந்திரன், ஸ்ரீதரன் மோதலையடுத்து அவசரமாகக் கூடுகிறது தமிழரசுக் கட்சி. இப்படி ஒரு செய்தியைப் பார்த்தேன்!***

***அப்ப இனி தமிழரசுக் கட்சி மத்தியகுழு கூட்டம் தேவை எண்டால் யாராவது மோதி ஆளுக்கால் ஊடகங்களில கருத்து சொன்னால்தான் தமிழரசுக் கட்சி தலைவர் கூட்டத்த கூட்டுவாரு எலுவா..?***

***சரி கூட்டத்த கூட்டித்தான் என்னத்த புடுங்கப்போறாங்க. சும்மா கூடிக்கலையிற கட்சிதான் இவங்க. சனத்துக்கு ஒண்டுமே நடக்காது...***

# வாச்சிக்குடா பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான பாலாலய கும்பாபிஷேகம்

(ஆலையடிவேம்பு நிருபர்)

ஐந்து அடி கற்சிலை அமைந்துள்ளதும் பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்த மருதமரத்தை தல விருட்சமாகவும்கொண்ட அக்கரைப்பற்று வாச்சிக்குடா ஸ்ரீ இராம பக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் பாலாலய கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றது.

ஐந்து முகங்களுடன் ஐந்தடி உயரத்தில் திருக்காட்சி தரும் ஸ்ரீ இராம பக்த பஞ்சமுக ஆஞ்சநேயரின் கற்சிலை அமைந்துள்ள ஆலயங்களில் முக்கியத்துவம் மிக்கதான இவ்வாலயத்தின் பாலாலய கும்பாபிஷேக விசேட பூஜைகள், கடந்த 05ஆம் திகதி கர்மாரம்ப கிரியைகளோடு ஆரம்பமாகி 06ஆம் திகதி இடம்பெற்ற கிரியைகளோடும் நேற்று இடம்பெற்ற பாலாலய கும்பாபிஷேகத்துடனும் நிறைவுற்றன.

அதிசயமிக்க இப்பெருமைமிகு ஆலய பூஜைகள் குருதேவர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் பரிபூரண ஆசீர்வாதத்துடன் ஹனுமன்தாசன் ராம்ஜி சுவாமிகளின் வழிகாட்டலுடன் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் காலை குருபூஜை நடைபெற்றதுடன், பாலாலய கும்பாபிஷேகம் நடைபெற்று விசேட பூஜைகளும் நடைபெற்றன.

தொடர்ந்து விசேட யாகபூஜைகள் ஆரம்பமானதுடன் பிரதான கும்ப வெளிவீதி உலாவும் இடம்பெற்றது.



வெளிவீதி உலாவாக எடுத்துவரப்பட்ட பிரதான கும்பம் ஆஞ்சநேய சுவாமி மீது சொரியப்பட்டதுடன், பரிவார மூர்த்திகள் மீதும் சொரியப்பட்டு 108 ஆஞ்சநேய மந்திர உச்சாடணமும் பூஜையும் நடைபெற்றதன் பின்னர் பாலாலய பூஜைகள் நிறைவுற்றன.

காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் ஆசிர்வாதத்தோடு ஆலய பரிபாலகர் நல்லதம்பி கந்தசாமியின் தலைமையில் இடம்பெற்ற கிரியைகள் யாவற்றையும் கிரியா கலாநிதி வித்தியாசாதகர் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ புண்ணிய கிருஸ்ணகுமாரக்குருக்கள் தலைமையில் கிரியாகிரம ஜோதி அலங்கார பூசனம் சிவாகமபானு அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ சு.சுதர்சன் குருக்கள் சிவஸ்ரீ சோ.கோகுலதாச சர்மா ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ த.குகனேஸ்வர சர்மா ஆகியோர் நடத்திவைத்தனர்.

# கௌரவமான அரசியல் உரிமைக்கான தீர்வு கோரி 100ஆவது நாள் போராட்டம் திருகோணமலையிலும்

(திருகோணமலை, மூதூர் நிருபர்கள்)

வடக்கு, கிழக்கு சிறுபான்மை மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை பெற்றுத்தருமாறு வலியுறுத்தி "100 நாட்கள் செயல்முனைவு" எனும் தொனிப்பொருளின் கீழ் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தின் 100ஆவது நாள் போராட்டம் நேற்று (08) இடம்பெற்றது.

இப்போராட்டமானது திருகோணமலை - முற்றவெளி மைதானத்தில் தீபங்கள் ஏற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது தமது கோரிக்கை நிறைவேற வேண்டி பலூன்கள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதில் தமிழ், முஸ்லிம் மக்கள் சுமார் 600 பேர் அளவில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கௌரவமான, உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறோம்:








1. வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு, கிழக்கு தனியொரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்.

2. ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசினால் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்

3. ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்

4. முதலமைச்சர் மக்கள் பிரதிநிதிகள் சபையின் தலைமை உறுப்பினராகத் திகழ்வார்.

5. ஆளுநர் என்பவர் மாகாணத்தின் மக்கள் பிரதிநிகள் சபையைக் கட்டுப்படுத்தாதவராகவும் மத்திய அரசின் கௌரவ பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும்.

6. வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்

7. மாகாண மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்திசார் சர்வதேச ஒப்பந்தங்களை மாகாண ஆட்சி மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் சர்வதேச வணிகம், தொழிற்றுறை அபிவிருத்தி, நகரமயமாக்கல் அடங்கலான கட்டுமான அபிவிருத்தி ஆகியன அடங்கல் வேண்டும்.

8. காணி மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஏனைய அனைத்து விவகாரங்கள் சார்ந்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாகாண ஆட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.

9. மாகாண அலகிற்கான பொலிஸ், உளவுத்துறை சேவைகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

10. நீதித்துறை, அரச நிர்வாகம், கல்வி, பொதுச் சுகாதாரம், பொதுப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், எரிபொருள் அடங்கலான ஏனைய அனைத்துத் துறைகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு மாகாண ஆட்சிக்குள்ள அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

11. தற்போது வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

12. தற்போதைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை - மிதக்கும் கடற்படைத்தளங்களை தேவையான கடற்பிரதேசங்களில் மத்திய அரசு அமைக்க வேண்டும். இதன்மூலம் மக்கள் காணிகள் இராணுவத்தின் வசமிருந்து விடுவிக்கப்படுவதுடன், இயல்புவாழ்வை மீளப்பெற முடியும்.

13. இலங்கையின் மத்திய அரசானது, வடக்கு, கிழக்கு மாகாண அலகு பொருளாதாரப் பலம் அடைவதற்காக குறிப்பிட்ட காலம்வரையில் தேவையான நிதிசார் ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும்.

14. தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டமை, பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் சார்ந்து பொறுப்புக்கூறும் கடப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது. எனவே, சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஐ.நாவின் வழிகாட்டலில் சர்வதேச நாடுகளுடன் இணைந்து நீதிப் பொறிமுறைகளை உருவாக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.

15. வடக்கு, கிழக்கு மாகாண அலகானது மாகாணத்துக்குள் வாழும் அனைத்து மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன-மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய நிலைபேறான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

16. மத்திய அரசானது, இலங்கை நாட்டின் மக்கள் அனைவரினதும் ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்க நாம் அயலிலுள்ள நட்புநாடான இந்தியாவையும், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஐ.நா.சபையையும் கோருகிறோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈழத்தமிழர்கள் எண்மருடன் நோர்வே கப்பல் நைஜீரியாவில் சிறைப்பிடிப்பு





## 16 இந்தியர்கள் உட்பட 26 வெளிநாட்டவர்கள் சிக்கித் தவிப்பு

ஈழத் தமிழர்கள் 8 பேர் மற்றும் 16 இந்தியர்கள் உட்பட 26 வெளிநாட்டினருடன் மசகு எண்ணெய்க் கப்பலொன்று நைஜீரியாவில் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயைச் சேர்ந்த தனியார் கப்பலான 'MV HEROIC IDUN'இல் இலங்கையைச் சேர்ந்த ஈழத்தமிழர்கள் 8 பேர் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் உட்பட 16 இந்தியர்கள் என மொத்தம் 26 வெளிநாட்டினர் பணிபுரிந்து வந்துள்ளனர்.

குறித்த கப்பல் மசகு எண்ணெயை ஏற்றுவதற்காக நைஜீரியாவுக்குச் சென்றுள்ளது. நைஜீரியாவை இக்கப்பல் சென்றடைந்த நிலையில் கடற்கொள்ளையர்கள், கப்பலை சுற்றிவளைக்க பின்தொடர்ந்துள்ளனர். இதனால் உயிர் தப்பிக்க கினியாவின் தீவு பகுதிக்குள் அக்கப்பல் நுழைந்தது. இச்சம்பவம் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்றுள்ளது.

தங்களது நாட்டில் அத்துமீறி கப்பல் நுழைந்ததால் 2.5 மில்லியன் டொலர் அபராதம் விதித்தது கினியா. இத்தொகையை கினியாவுக்கு நோர்வே கப்பல் செலுத்திவிட்ட நிலையில், நைஜீரியாவிடம் அக்கப்பல் ஒப்படைக்கப்பட்டது. ஈழத் தமிழர்கள் 8 பேர் உட்பட வெளிநாட்டினர் 26 பேர் தற்போது நைஜீரிய கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.


இந்நிலையில், நைஜீரியாவோ, ''மசகு எண்ணெய் திருட்டில் நோர்வே கப்பல் ஈடுபட்டது; ஆகையால், அந்தக் கப்பல் தொடர்பாக விசாரணைகள் நடத்தி வருகிறோம்'' என்றது. இது தொடர்பக நைஜீரியாவிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நைஜீரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி 16 இந்தியர்களை மீட்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே நைஜீரியா கடற்படையிடம் சிக்கியுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 3 பேரை பாதுகாப்பாக மீட்க வேண்டுமென அவர்களது உறவினர்கள் மத்திய, மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நைஜீரியா கடற்படையிடம் தமிழகத்தைச் சேர்ந்த பிரிஸ்பன் (தூத்துக்குடி), ராஜன் தீபன்பாபு (சென்னை), சுகுமார் (இராமாபுரம்) ஆகியோர் சிக்கியுள்ளனர். இது தொடர்பாக தமிழக அரசு, மத்திய அரசிடம் பேச வேண்டும்; நைஜீரியாவில் தத்தளித்து வரும் இந்தியர்கள் அனைவரையும் பாதுகாப்பாக தாயகம் அழைத்துவர வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாகவுள்ளது.

### வாட்டும் வெப்பம்:

# ஐரோப்பாவில் 15,000 பேர் பலி



ஐரோப்பாவில் நடப்பாண்டில் மட்டும் வெப்பத்தின் தாக்கத்தால் சுமார் 15 ஆயிரம் பேர் உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக ஜேர்மனியில் 4,500 பேரும், ஸ்பெயினில் 4,000 பேரும், பிரிட்டனில் 3,200 பேரும், போர்த்துக்கலில் 1,000 பேரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த ஜூன் மாதம்முதல் ஓகஸ்ட் மாதம்வரை 3 மாத கோடைக் காலத்தில் மட்டுமே வெப்பத்தின் தாக்கத்தால் கிட்டத்தட்ட 11 ஆயிரம் இறப்புகள் பதிவாகியிருக்கின்றமை குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையர்களுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஐ.நாவிடம் ராமதாஸ் கோரிக்கை

''கப்பல் விபத்திலிருந்து மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத் தர ஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என பா.ம.க. நிறுவுனர் டொக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ஏலவே, ம.தி.மு.க. பொதுச் செயலளார் வைகோ, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் கடற்பகுதியில் விபத்துக்குள்ளான கப்பலை மீட்க இந்தியா உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதமொன்றை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புகலிடம் தேடி 306 இலங்கைத் தமிழர்களுடன் கனடா நோக்கிச் சென்ற கப்பலொன்று பிலிப்பைன்ஸ் அருகில் புயலில் சிக்கி நீரில் மூழ்கத் தொடங்கியது. பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் இடையே விபத்தில் சிக்கிய கப்பலில் குழந்தைகள், பெண்கள், முதியவர்களும் என 306 இலங்கைத் தமிழர்கள் பயணித்துள்ளனர். இதனை அறிந்து இலங்கையைச் சேர்ந்த ஒருவர் இலங்கை கடற்படையை தொடர்புகொண்டு ''நாங்கள் 306 பேர் நடுக்கடலில் ஆபத்தான நிலையில் உள்ளோம். நாங்கள் சென்ற கப்பல் கடலில் மூழ்கும் நிலையில் உள்ளது'' என தெரிவித்தார்.

இதனையடுத்து கொழும்பிலுள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சார்பில் சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் கடற்படையை தொடர்பு கொண்டு நடுக்கடலில் சிக்கியவர்களை



மீட்க இலங்கை அரசு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில், சிங்கப்பூர் கடற்படை அந்தக் கப்பலையும், கப்பலில் பயணித்த 306 பயணிகளையும் பத்திரமாக மீட்டுள்ளதாக இலங்கை கடற்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இது குறித்து பா.ம.க. நிறுவுனர் டொக்டர் ராமதாஸ் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது,

''கனடாவில் தஞ்சம் புகும் நோக்குடன் 306 இலங்கையர்கள் பயணித்த கப்பல், பிலிப்பைன்ஸ் அருகில் புயலில் சிக்கித் தவித்த நிலையில், அவர்களை சிங்கப்பூர் அதிகாரிகள் மீட்டு, வியட்நாமுக்கு அனுப்பி வைத்திருப்பது நிம்மதியளிக்கிறது. சிங்கப்பூர் அரசு காலத்தால் செய்த உதவி பாராட்டத்தக்கது'' - என பா.ம.க. நிறுவுனர் டொக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

முதலில் போராலும், பின்னர் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ முடியாமல், பிற நாடுகளில் தஞ்சமடைய தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் அவர்களுக்கு அகதிகள் தகுதியும், கண்ணியமான வாழ்வுரிமையும் மறுக்கப்படுகிறது.

அதனால் கனடா, பிரித்தானியாவுக்கு சொந்தமான டியாகோ கார்சியா தீவு, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சம் தேடி பாதுகாப்பற்ற முறையில் கப்பல் பயணம் மேற்கொண்டு பல தருணங்களில் விபத்துகளில் சிக்கி இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

கப்பல் விபத்திலிருந்து மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் பெற்றுத் தரவும், இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அந்த நாட்டின் ஏழை, எளிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கவும் ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உலகில் 3 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன..!

### உங்களால் நம்ப முடிகிறதா?



உலகிலுள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை மூன்று ட்ரில்லியன். அதாவது, மூன்று இலட்சம் கோடி...! மூன்று ட்ரில்லியன் என்பது மூன்றை தொடர்ந்து பன்னிரெண்டு பூஜ்ஜியங்கள் கொண்ட ஓர் எண்.

போல் வீதியிலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையைவிட பூமியிலுள்ள மரங்களின் எண்ணிக்கை அதிகம். மனித மூளையிலுள்ள செல்களின் எண்ணிக்கையைவிட அதிகம். கேட்பதற்கு வியப்பாக இருந்தாலும் இது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மை. பூமியில் வாழும் மனிதர்களின் எண்ணிக்கை 700 கோடி. ஒவ்வொரு நபருக்கும் தோராயமாக 400 மரங்கள் உள்ளன என்கிறது இந்தக் கணிப்பு.

உலகில் அதிக மரங்கள் உடைய நாடு ரஷ்யா. ரஷ்யாவிலுள்ள வனப்பகுதியின் மொத்த அளவு சுமார் 8 இலட்சத்து 24 ஆயிரத்து 9,300 சதுர கிலோமீற்றர். இது அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 45 சதவீதத்துக்குச் சமம். அமெரிக்கா நான்காவது இடத்திலுள்ளது. கிட்டத்தட்ட 3 இலட்சத்து 950 சதுர கிலோமீற்றர் வனப்பரப்பைக் கொண்டுள்ளது. இந்த வரிசையில் இந்தியா பத்தாவது இடத்திலுள்ளது. இந்த மரங்கள் இயற்கை மருந்துகளின் சிறந்த ஆதாரமாக அறியப்படுகிறது.

உலகில் ஒவ்வொரு ஆண்டும் வெட்டப்படும் மரங்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறு கோடிக்கும் அதிகமாக உள்ளது. ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்து 92 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அதிவேகமாக அழிக்கப்பட்டு வருவதால், மனித நாகரிகம் தொடங்கும்போது இருந்த மரங்களின் எண்ணிகை தற்போது பாதியாகக் குறைந்துள்ளது. இத்தகவல்கள் 'நேச்சர்' என்ற ஆய்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

காடுகளை நிலமாக்கும் மனித செயற்பாடுகள்தான் உலக அளவில் இயற்கை சூழலை அழித்து வருகின்றன. கடந்த நூறு ஆண்டுகளில் மக்கள்தொகை மிக வேகமாக அதிகரித்ததும் அவர்களின் தேவைகள் அதிகரித்ததும் இதற்கு முக்கியமான காரணங்கள். நட்சத்திரங்களைவிட மரங்கள் அதிகமாக இருந்தால்தான் நாம் இந்த பூமியில் நிம்மதியாக வாழமுடியும் என்கின்றனர் இயற்கை ஆய்வாளர்கள். மரங்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டால் நமது எதிர்கால சந்ததியினர் அதீத இன்னலுக்குள்ளாக வேண்டியிருக்கும் என்பதை நாம் அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

# உலகம் நரகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது

## ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் எச்சரிக்கை




பருவநிலை விவகாரத்தில் நரகத்தை நோக்கி உலகம் மிக வேகமான பயணத்தை மேற்கொண்டு வருகிறது. புவி வெப்பமயமாதலை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லையெனில், மனிதகுலம் அழிந்துபோகும் - என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் (António Guterres) எச்சரித்துள்ளார். பருவநிலை மற்றாம் தொடர்பான 27ஆம் ஆண்டு ஐ.நா. உச்சிமாநாடு எகிப்தில் நடைபெற்று வருகிறது.

இதில் பங்கேற்று உரையாற்றிய ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், புவி வெப்பமயமாதலை தடுக்க உலக நாடுகள் காலநிலை ஒற்றுமை ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும். இல்லையெனில் தானாகவே கூட்டு தற்கொலை ஒப்பந்தம் உருவாகிவிடும் என எச்சரித்தார்.

புவி வெப்பமயமாகும் வேகத்தைப் பார்த்தால் நகரத்தை நோக்கி அதிவிரைவு சாலையில் நாம் பயணித்துகொண்டிருக்கிறோம் என்பது தெளிவாகத் தெரிகிறது எனக் கூறிய அன்டோனியோ குட்டரெஸ், நாம் ஒன்றுபட்டால் உயிர் பிழைக்கலாம் அல்லது அழிந்து போகலாமே எனத் தெரிவித்தார். புவி வெப்பமயமாதலால் ஏற்படும் பாதிப்புகளை வளரும் நாடுகள் அதிகம் சந்தித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பிரான்ஸ் தலைநகர் பரீஸில் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற வருடந்த ஐ.நா. மாநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், தொழில்புரட்சிக்கு முன்பிருந்ததைவிட 1.5 டிகிரி மட்டுமே அதிகமாக உலகின் வெப்பநிலையை வைத்திருக்கவும், அதற்காக காற்றில் கலக்கும் கரியமிலவாயுவின் அளவைக் கட்டுப்படுத்தவும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட 195 நாடுகள் ஒப்புக்கொண்டன.

எனினும், அந்த இலக்கை எட்டுவதற்குப் போதுமான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தச் சூழலில், எகிப்தின் ஷார்ம் அல்ஷேக் நகரில் 27ஆவது ஐ.நா. சர்வதேச பருவநிலை மாநாடு ஞாயிற்றுக்கிழமை தொடங்கி எதிர்வரும் 18ஆம் திகதிவரை நடைபெறுகிறது.

# ஈராக்கில் வாசிப்புத் திருவிழா



ஈராக்கில் நடைபெற்ற புத்தக வாசிப்புத் திருவிழாவில் மக்கள், தங்களுக்குப் பிடித்த புத்தகங்களை நீண்ட வரிசைகளில் நின்றபடி ஆர்வமுடன் படித்து பொழுதுபோக்கினர்.

மக்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை மீண்டும் பிரபலப்படுத்துவதற்காக கடந்த 9 ஆண்டுகளாக இந்த வாசிப்புத் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது.

7 மாகாணங்களில் நடைபெற்ற வாசிப்புத் திருவிழாவிற்காக வெவ்வேறு நூலகங்கள் சார்பில் சுமார் 70,000 புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7